Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 புரட்டாதி 22 ஆம் நாள் (08.10.2002) செவ்வாய்க்கிழமை இதழ் : 08

சொலெக்ஸ்
மூக்குக் கண்ணாடியகம்
கண் பரிசோதித்து கண்ணாடி வழங்கல்
செயற்கை மாபிள் கண்களுக்கும்
மற்றும் பல் கட்டுதல், மிதப்புப் பற்களுக்கு
கிளிப்ஸ் செய்து கொடுத்தல்.
லக்ஷரி பல் கட்டுமிடம்
(சி/036)
232/A, கண்டி வீதி, சாவகச்சேரி.

எமது சாவு சமாதானத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது

தமிழ் அரசியற் கைதிகள் பிரதமர் ரணிலுக்கு உருக்கமான கடிதம்

(கொழும்பு)

"எமது சாவு இந்நாட்டின் சமாதானத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது. எமது உண்ணாவிரதப் போராட்டத்தில் நாம் சாவை சந்தித்தால் அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானத்தை முறித்துக் கொள்ளாமல் இந்நாட்டில் அனைத்து பிரஜைகளின் நன்மையை கருத்திற்கொண்டு சமாதான முயற்சிகளைத் தொடர வேண்டும்" - இவ்வாறு உருக்கமான கடிதம் ஒன்றை களுத்துறைச் சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்திலீடுபட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

நேற்று அவர்களைச் சந்தித்த அமைச்சர் மகேஸ்வரன் ஊடாக இந்தக்கடிதம் பிரதமர் ரணிலிடம் ஒப்படைக்கப்பட்டது. 'விடுதலை இன்றேல் உயிர்துறப்போம்' என்ற தலைப்பில் அவர்கள் எழுதி அனுப்பிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தாங்கள் திட்டமிட்டுள்ள சமாதானமும் அபிவிருத்தியும் என்ற செயற்றிட்டங்கள் வெற்றிபெற நாம் வாழ்த்துவதுடன் பிரார்த்திக்கின்றோம். முதலாம் திகதி முதல் ஆரம்பித்த எமது உண்ணாவிரதப் போரட்டம் எமது விடுதலை அல்லது சாவுவரை உறுதியாகத் தொடரும் என்பதைத் தயவுடன் உங்களுக்கு அறியத் தருகின்றோம்.

எம்மை அரசு மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்கத் தவறினால் நாம் சிறைக்கம்பிகளுக்கு பின்னால் தியாகங்களைச் சந்திப்போம். நாம் சமாதானத்தைக் குழப்ப அல்ல அனுபவிக்கவே போராடுகிறோம் .

எந்த விதமான வாக்குறுதிகளையும் நாம் ஏற்றுக் கொள்ளத் தயா

(10ஆம் பக்கம் பார்க்க)

இரு புலிகளை விடுவிப்பதற்கு மனுத்தாக்கல் செய்யப்பட்டது

(கொழும்பு நிருபர்)

திருகோணமலையில் வைத்துக் கைதான இரண்டு விடுதலைப்புலிகளையும் பிணையில் விடுவிக்கக் கோரும் மனு நேற்று - கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கலானது.

திருமலை - முள்ளிப்பொத்தானையில் வைத்து கந்தளாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மாதவன் வசந்தன், கந்தசாமி இராமசாமி ஆகியோரின் சார்பிலேயே பிணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

கைதானவர்களை 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்ததால் - பிணை மனுக்களின் பிரகாரம் இவர்கள் 10ஆம் திகதியன்று பிணையில் விடுதலை செய்யப்படலாம் எனத் தெரியவருகிறது.

திருமலையிலும் உண்ணாவிரதம்

சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து இன்று திருமலையில் உண்ணாவிரதப் போராட்டமொன்று நடைபெறவுள்ளது.

விண்ணைம் விநாசியர்

சமாதான காலத்திலையும் எங்கடை உறவுகள் சிறையிலை சாகிறதா...?

வடமராட்சி கிழக்கில் பன்னிரு வேங்கைகளின் நினைவு தினம்

வடமராட்சி கிழக்கில் நடைபெற்ற பன்னிரு வேங்கைகளின் நினைவு தினத்தில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை மலர் அஞ்சலி செலுத்துவதையும், பன்னிரு வேங்கைகளின் திருவுருவப்படங்கள் ஊர்வலமாக எடுத்துவரப்படுவதையும் மேலேயுள்ள படங்களில் காணலாம்.

கோயிலாக்கண்டி முகாம் அமைப்பு மக்கள் எதிர்ப்பால் நிறுத்தம்!

(மீசாலை)

நாவற்குழி, கோயிலாக்கண்டி பிரதேசத்தில் படையினரால் அமைக்கப்படவிருந்த இராணுவ முகாம் ஒன்று அவ்வூர் மக்களின் எதிர்ப்பினால் கைவிடப்பட்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் புல்டோசர்கள் சகிதம் ஆரம்பக் கட்ட முகாம் அமைக்கும் பணியில் ஈடுபட முயற்சித்தபோது அவ்வூர் மக்கள் ஒன்றுசேர்ந்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். இராணுவத்தினருடன் மக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து இராணுவ முகாம் அமைக்கும் முயற்சி நிறுத்தப்பட்டது. தாம் முகாமிடாவிட்டால் அப்பகுதி மக்களை அங்கு குடி

(10ஆம் பக்கம் பார்க்க)

நெடுந்தீவு சம்பவம்

இரு நாட்களுக்குள் அறிக்கை தருக ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு

நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. முகாம் தாக்கி எரிக்கப்பட்டது தொடர்பாக உடன்விசாரணை நடத்தி இரு நாட்களுக்குள் பூரண அறிக்கை தருமாறு ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டுள்ளார்.

இராணுவத்தளபதிக்கும் பொலீஸ் மா அதிபருக்கும் வழங்கப்பட்டுள்ள இந்த உத்தரவில் சந்தேகநபர்களை உடனடியாகக் கைது செய்யுமாறும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பி. தம்முடன் தொடர்புகொண்டு விபரம் தந்திருப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக

நாளை வெகுஜனப் போராட்டம்; பொது அமைப்புகள் தயாராகின்றன!

(யாழ்ப்பாணம்)

உண்ணாவிரதப் போராட்டம் நடாத்திவரும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து குடாநாடு தழுவிய வெகுஜனப்போராட்டம் ஒன்று நாளை நடைபெறவுள்ளது.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகள் தொழிற்சங்கங்கள் உட்பட மனித உரிமை அமைப்புகள் ஆகியவை இணைந்து மேற்படி வெகுஜனப் போராட்டத்தை நாளை நடாத்தவுள்ளன.

களுத்துறைச் சிறைச்சாலைகளிலும் வேறு சிறைச்சாலைகளிலும் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்தும் முகமாகவும் அவர்

(10ஆம் பக்கம் பார்க்க)

அரச அதிபராக நேற்று பத்மநாதன் பதவியேற்றார்.

அமைச்சர் மொறகொட, மன்னார் ஆயர் கைதிகளைச் சந்திக்க அனுப்பப்படுவர்

பிரதமர் ரணிலின் உத்தரவை அடுத்து

(கொழும்பு)

களுத்துறைச் சிறையில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்துவரும் தமிழ் அரசியற் கைதிகளைச் சந்திக்க அமைச்சர் மிலிந்த மொறகொட, மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு ஜோசப் ஆகியோரை அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

மேற்படி சிறையில் உண்ணாவிரதமிருக்கும் கைதிகளின் நிலைமை நாளுக்குநாள் மோசமடைந்து வருகிறது. அதனை தொடர்ந்து இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பின்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் மற்றும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண, களுத்துறை நகரபிதா ஆகியோர் நேற்றுக் களுத்துறைச் சிறைச்சாலைக்கு விஜயம் செய்தனர்.

இச்சிறைச்சாலையின் 'ஏ'பிரிவு கைதிகள் சுமார் 18 பேர் மயக்க மடைந்தநிலையில் காணப்பட்டனர். இதேபோல் 'பி' பிரிவில் 9 பேர் மயங்கியநிலையில் காணப்பட்டனர். இவர்களில் ஒருவர் கோவில் பூசகர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - அமைச்சர் மகேஸ்

(10ஆம் பக்கம் பார்க்க)

ஓமந்தையில் புலிகள் - இராணுவத் தளபதிகள் கூடியிருந்தமைக்கு படைத்தரப்பில் விசனம்!

(கொழும்பு)

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் போர்க் கைதிகளைப் பரிமாறிக்கொண்ட நிகழ்வில் படைத்தளபதிகளும் புலிகளின் தளபதிகளும் அருகருகே அமர்ந்திருந்தமை குறித்து சில மூத்த படை அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த ஊடகம் மேலும் தெரிவித்ததாவது -

ஓமந்தையில் நடந்த கைதிகள் பரிமாற்ற நிகழ்வில் கலந்துகொண்ட முப்படைத் தளபதிகளும், புலிகளின் தளபதிகளும் ஒரே வரிசையில் அமர்ந்திருந்தனர்.

புலிகளின் வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபனும், பீரங்கிப் படையணிச் சிறப்புத் தளபதி கேணல் பானுவும், இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பல கல்லவின் இருபுறமும் அமர்ந்திருந்தனர்.

இதற்கு உயர் படைத்தளபதிகள் சிலர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அருகருகே புலிகளின் தளபதிகளுடன் லயனல் பல கல்ல அமர்ந்திருந்தமை புலிகளுக்குச் சம அந்தஸ்தை வழங்கிவிட்டதாக மேஜர் ஜெனரல் தர அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்கு நாட்டுத் தூதரக அதிகாரி ஒருவரும் கருத்து வெளியிட்டபோது இது புலிகளுக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை கைதிகள் பரிமாற்ற நிகழ்வில் புலிகள் தரப்புக்கும், அரச தரப்புக்கும் தனித்தனியாகவே இருக்கை வசதிகள் செய்யப்பட்டிருந்ததாகவும் நிகழ்வு தொடங்கிய போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தான் இரு தரப்பினரும் இணைந்து இருக்கத்தக்க வகையில் ஏற்பாடுகளைச் செய்ததாகவும் கூறப்படுகிறது.

ஓமந்தையில் பலகல்லவுடன் புலிகளின் தளபதிகள்

எரிக் கனேஷ்

- இலவசமாக கண்களை பரிசோதித்து தரம்மிக்க கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்
- சீன முறையில் பயிற்சிபெற்ற நிபுணர்களினால் உறுதிமிக்க பற்களைக் கட்டிக்கொள்ளவும்
- மிதப்புப் பற்களுக்கு கிளிப்போட்டு 3மாதகாலத்தில் சீரமைத்துக் கொள்ளவும்

நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எரிக் கனேஷ்

மூக்குக்கண்ணாடியகமும், பல்கட்டுமிடமும்
564, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளைகள்:- 80, K.K.S. Rd, சுன்னாகம் (சி-034) 91, K.K.S. Rd, கொக்குவில்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஹாட்லியின் புகழ்பூத்த மைந்தன்

திரு T.E.ஆனந்தராஜா

பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டதை பெருமகிழ்வுடனும் பேருவகையுடனும் பாராட்டுவதுடன் அவர் தம் கடமையை செவ்வனே செய்து பார்போற்றிட வேண்டி நிற்கின்றோம்

ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் மன்றமும், கிளைகளும்.

(சி-042)

மணல் விநியோகம் தற்காலிக நிறுத்தம்

எமது சங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட மணல் விநியோகம் இன்றும் நாளையும் (8ஆம், 9ஆம் திகதிகளுக்கு) தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கம்.
குடத்தனை.

(சி-043)

யாழ்.நகரில் நவராத்திரி, தீபாவளியை முன்னிட்டு

DIALOG G.S.Mஇன் விசேட விலைக் குறைப்பு

DIALOG G.S.M அறிமுகப்படுத்தப்பட்டு ஒரு மாத நிறைவின் நெகிழ்ச்சியில் நாம் வழங்கும் விசேட விலைச் சலுகை

வருகின்ற 9.10.2002 ல் இருந்து வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு குறிப்பிட்ட ஒரு சில வாரங்களுக்கு மட்டும் இவ் வாய்ப்புள்ளது

	பழையவிலை	புதியவிலை
ALCATEL	12950/-	12425/-
SAGEM	12950/-	11950/-



புதிதாய் நீங்கள் ஒன்றை வாங்கும் போது, குறைந்த விலையில் பெற்ற அதிஷ்டசாலியாகிறீர்கள் மேலும் எமது சேவை 3.10.2002 இலிருந்து பருத்தித்துறை, கோப்பாய்,அச்சுவேலி,ஆவரங்கால்,கைதடி,வரையும் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது தற்போது சாவகச்சேரியில் புதிய தொலைத் தொடர்புகோபுரம் அமைக்கப்பட்டு வருவதால் குடாநாடு முழுவதுமே DIALOG G.S.M இன் சேவை உங்களை வந்தடைகின்றது. எனவே நீங்களும் உலக வலையமைப்போடு ஒன்றிணையுங்கள்.

உங்கள் கைகளில் DIALOG G.S.M இருந்தால்
இந்த உலகம் முழுவதும் இனி உங்களருகில்

வேறு இடங்களில் வாங்கப்படும் DIALOG G.S.M இன் இணைப்புகள் துண்டிக்கப்படும்

எமது ஏக விநியோகஸ்தர்கள்

தலைமைப்பணிமனை

1. THE PHONE SHOP
இல.204, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:0777-110111

2. THE PHONE SHOP
பவாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.
தொலைபேசி இல:0777-110525

3. THE PHONE SHOP
காங்கேசன் துறை வீதி,
சுன்னாகம்.
தொலைபேசி இல:021-2223817

4. THE PHONE SHOP
பிரதான வீதி,
நெல்லியடி.
தொலைபேசி இல:021-2263267

5. THE PHONE SHOP
கைலாசபிள்ளையார் கோயிலடி,
நல்லூர்.
தொலைபேசி இல:0777-110160

6. THE PHONE SHOP
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.
தொலைபேசி இல:021-2223817

(சி-041)

2ஆம் லெப்.மாலதி நினைவு நாள்
தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் 10.10.2002

2ஆம் லெப்.மாலதி நினைவு நாளான தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வுகள் வன்னிப் பெருநிலப்பரப்பு திறந்தவெளி அரங்கில் நடை பெறக் காத்திருக்கின்றது....

தமிழ்ழ விடுதலைப்புலிகளின் மகளிர் படையணிகள் ஒருங்கிணைந்து நடாத்தும்

மாபெரும் எழுச்சி நிகழ்வு

- மகளிர் படையணியின் இராணுவ அணிவகுப்புகள்
- மகளிர் படையணியின் போராட்ட வரலாற்றைச சித்தரிக்கும் ஊர்திகள் பவனி
- உயிர்க் கவிதையின் உயர் வேதம்... (நாடகம்)
- உண்மைச் சம்பவங்களைத் தாங்கிய உயிரை உருக்கிடும் கலை நிகழ்வுகள்
- விசேட படையணியின் வீர தீரச் செயல்கள்
- தமிழீழ இசைக்குழுவின் இசை வார்ப்புகள்
- அமெரிக்காவின் 'கிறீன் பரே' அணியினரிடம் பயிற்சிகள் பெற்ற சிறிலங்காவின் One Commondo, Two Commondo விசேட அணிகள் மகளிர் படையணியின் புதிய போர்த் தந்திரோபாய யுத்தத்தினால் முறியடிக்கப்பட்ட 'மன்ன குளச் சமரின்' மாதிரி வடிவ நிகழ்வு.

இன்னும் பல நிகழ்வுகளும் இடம்பெறக் காத்திருக்கின்றன....

வீழ்ந்தது விதை
எழுந்தது பயிர்
கடந்தது நெருப்பு
உயர்ந்தது கரம்

பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும்... கேட்போரை மெய்சிலிர்க்க வைக்கும்...
நேற்று எழுந்த எரிமலையை அணைத்தவர்கள்,
இன்று சமாதானப் பாதைக்கு வழி அமைத்தவர்கள் இந்த அக்கினிப் பூக்களா...!
நீங்களே வியந்து நிற்க,
உங்கள் பிள்ளைகள் வெற்றியோடு உங்களை நோக்கி... காணத்தவறாதீர்கள்.

மாலதி படையணியின் உருவாக்கத்தில் ...
களத்தில் நிற்கும் போராளிகளின் குரலாக வெளிவருகின்றது...

வெஞ்சமரின் வரிகள்
பாடல் ஒலிப்பேழை

அன்பரசி படையணி, திலகா படையணி உட்பட ஆயிரக்கணக்கான பெண் போராளிகள் பங்கு கொண்டு நடாத்தும் மாபெரும் எழுச்சி நிகழ்வினைக் கண்டு மகிழ அனைத்து மக்களையும் வருக.. வருக... என அன்போடு அழைக்கின்றோம்.

காலம் : 10.10.2002
நேரம் : மாலை 3.00 மணி (தமிழீழ நேரப்படி)
இடம் : கிளிநொச்சி மத்திய விளையாட்டுத் திடல்

நன்றி
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்
மகளிர் படையணி,
தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழீழம்.

3 கிலோமீற்றர் நிலப்பரப்பு மண்ணில் புதையுண்டது!

மலையகத்தில் மேலும் அபாயம் தொடரலாமென எச்சரிக்கை

(கொழும்பு நிருபர்)

பலாங்கொடைப் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்ட மண்சரிவைத் தொடர்ந்து பதுளைக்கும் கொழும்புக்கும் இடையிலான போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன.

இந்த மண்சரிவின்போது இரு வீடுகள் மண்ணில் புதையுண்டிருக்கின்றன. 3 கி.மீ. பரப்பளவுடைய நிலப்பகுதி சரிந்துபோயுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதுபோன்ற மண்சரிவுகள் பதுளை, மாத்தளை, நுவரெலிய, கண்டி, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக ஏற்பட வாய்ப்புள்ளதாக புவியியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

இத்தகைய தொடர்ச்சியான மண்சரிவுகள் ஏற்படுவதற்கு சமனல வெவ நீர்த்தேக்கத் திட்டம் காரணமாக இருக்கும் என முன்னரே எச்சரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஓய்வுபெறும் வயதெல்லை 57ஆக அதிகரிப்பு!

தபால் தினைக்களம் சுற்றறிக்கை

(அரியாலை)

ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான வயதெல்லை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தபால்தினைக்களம் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

ஓய்வு பெறுவதற்கான வயதெல்லை 57 ஆக உயர்த்தப்பட்டுள்ளதோடு விரும்பியவர்கள் 55 வயதுடன் ஓய்வூதியம்பெற உரித்துடையவர்கள் என்றும் தொடர்ந்து சேவையாற்ற விரும்புவோர் மூன்று வருடங்களிற்கு சேவை நீடிப்புப் பெறலாம் எனவும் தபால் தினைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள புதிய சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (55)

தமிழில் பரிச்சயமற்ற யாழ்.சிறைச்சாலை ஊழியர்கள்!

(சங்குவேலி)

யாழ். சிறைச்சாலையில் சிறைக் காவலர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்குத் தொடர்ந்தும் பற்றாக்குறை நிலவுவதாகக் குறை கூறப்படுகின்றது.

சிறைச்சாலையில் தற்போது 33 உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்கள் இருப்பதாகவும், தற்சமயம் கடமையாற்றும் பெரும்பாலான ஊழியர்களுக்கு தமிழ் மொழியில் பரிச்சயம் இல்லையெனவும் அதனால் தமது கடமைகளைப் பூரணமாகச் செய்ய முடியாத நிலை உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (100)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைச் செயலக திறப்புவிழா!

(நமது நிருபர்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைமைச்செயலகத் திறப்புவிழா நாளை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள இத்தலைமைச் செயலகத் திறப்புவிழாவில் - பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை கலந்துகொள்ளவுள்ளார்.

முகமாலை மக்கள் ஏக்கம்!

(சங்குவேலி)

யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட மக்களின் யாத்திரைத் தலங்களில் ஒன்றாக விளங்கும் முகமாலை புனித ஆரோக்கிய அன்னை ஆலயம் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து எப்போது விடுவிக்கப்படும். நாம் மீண்டும் எமது பாதுகாவலியான அன்னையிடம் சென்று வழிபடும் நாள் இந்த சமாதான காலத்திலாவது ஏற்படாதா? போன்ற வினாக்கள் முகமாலை பங்கு மக்கள் உட்பட பலராலும் கவலையுடன் எழுப்பப்பட்டு வருகின்றது.

கடந்த 2000ஆம் ஆண்டில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக ஆலயம் மிகவும் மோசமாக சேதமாக்கப்பட்டுள்ளதுடன், ஆலயத்தை உள்ளிட்ட அப்பகுதி இராணுவத்தினரால் வேலியிடப்பட்டும் உள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய பல்வேறு பகுதிகளிலிருந்து இராணுவம் விலகிவரும் சூழலில், மிக அண்மைக்காலத்தில் இராணுவ முகாமாக மாற்றப்பட்டு, இவ்வாலயம் மூடப்பட்டிருப்பது அன்னையின் பக்தர்கள் அனைவருக்கும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. (100)

வெரித்தாஸ் வானொலி உறவுச் சங்கமம்

17ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

(மானிப்பாய்)

இலங்கையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வெரித்தாஸ் வானொலி நேயர்களின் "உறவுச் சங்கமம்" நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காகவும், நேயர்களைச் சந்தித்து உரையாடுவதற்காகவும் வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப்பணி பொறுப்பாளர் அருட்திரு. எ.சிங்கராயா அடிகளார் மற்றும் வெரித்தாஸ் வானொலியின் முகாமையாளர் அருட்திரு. கார்லோஸ் லாரியோசா, நிகழ்ச்சிப் பணிப்பாளர் மொன்சிஞ்ஞே பியாற்றோகுயின் வான்ரை, ஆசிய ஆயர் பேரவையின் பிரதம செயலாளர் அருட்திரு. பிரான்ஸ் ஜோசவ் ஈஸ்வர் ஆகியோரும் இலங்கை வரவுள்ளனர்.

எதிர்வரும் 15ஆம் திகதி கொழும்புக்கு வருகைதரவிருக்கும் இவர்கள் இம்மாதம் 17ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலும், 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை வன்னியிலும், 19ஆம் திகதி சனிக்கிழமை வவுனியாவிலும், 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பிலும் இடம்பெறவுள்ள "உறவுச் சங்கமம்" நிகழ்வுகளில் பங்குபற்றவுள்ளார்கள். இந்நிகழ்வுகளில் கலந்துகொள்ள விருக்கும் நேயர்கள் தமது கடிதங்களை எழுதி உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (100)

அகில இலங்கை ரீதியில் மூன்றாமிடம்

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு அஞ்சல் தினைக்களத்தினால் நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் ஹாட்லிக் கல்லூரி மாணவன் ஆர். மோகனப்பிரியன் அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

அடுத்த கட்டப் பேச்சு நிகழ்ச்சிநிரல் முன்கூட்டியே மக்களுக்கு தரவேண்டும்!

பொ.ஐ.மு. செயலாளர் டி.எம்.ஜயரட்ண கூறுகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் நடத்திய முதற்கட்ட பேச்சுவார்த்தையின் விபரங்களை அரசாங்கம் இன்னமும் வெளியிடவில்லை என பொதுஜன ஐக்கிய முன்னணி செயலாளர் டி.எம்.ஜயரட்ண குற்றம்சாட்டியுள்ளார்.

பேச்சுவார்த்தையின் விபரங்களை வெளியிடுவதன் மூலம் பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தமுடியும் எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறவிருக்கும் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையின் நிகழ்ச்சி நிரல்களை நாட்டு மக்களுக்கு முன்கூட்டியே தெரியப்படுத்த வேண்டும். எனவும் தெரிவித்த அவர், இவ்வாறு அரசாங்கம் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தாது விடுமானால் தாம் மக்களின் கவனத்திற்குக் கொண்டு வரும் நடவடிக்கையில் ஈடுபடுவோம் எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:-

அரசாங்கம் பேச்சுவார்த்தை தொடர்பான நிகழ்ச்சி நிரல்களை முன்கூட்டியே பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படாது இருக்கும் பட்சத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி சந்தேகப் பார்வையுடன் நோக்குவது தவிர்க்க முடியாது போகும் எனவும் கூறினார்.

லெப்.கேணல் விக்டர் நினைவாக உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

(வவுனியா நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் விக்டரின் 16ஆவது ஆண்டு நினைவு நாளை 12ஆம் திகதி அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதனையொட்டி தமிழ் எழுச்சிப்பேரவையின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட உதைப்பந்தாட்டக் கழகங்களுக்கிடையில் உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

லெப்.கேணல் விக்டரின் நினைவு தினமான 12ஆம் திகதி உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நடைபெறவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

பன்னிரு வேங்கைகளின் நினைவுநாள் வவுனியாவிலும்

(வவுனியா நிருபர்)

லெப்.கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வேங்கைகளின் நினைவுநாள் வவுனியா புதுக்குளத்திலும அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமான நினைவுநாள் நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் உட்பட பலர் உரையாற்றியதுடன் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

சின்னஞ்சிறு செய்திகள்

வலி-வடக்கு விளையாட்டுக்கழக கலந்துரையாடல்

(மல்லாகம்)

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சகல விளையாடுக் கழகங்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் விளையாட்டுக்கழக தலைவர், செயலாளர் ஆகியோரை கலந்துகொள்ளுமாறும், இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத கழகங்களை பதிவுசெய்து கலந்துரையாடலில் பங்குபற்றுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (68)

குழந்தை யேசுவுக்கு சங்குவேலியில் புதிய ஆலயம்

(மானிப்பாய்)

மானிப்பாய் சங்குவேலியில் குழந்தை யேசுவுக்கு புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தின் திறப்பு விழா அண்மையில் திருப்பலியுடன் திறந்து வைக்கப்பட்டது.

உடுவில் கந்தரோடை பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள இவ் ஆலயத்தில் பிரதி திங்கள்தோறும் மானிப்பாய் பங்குத்தந்தை அருட்திரு.பெனற் அடிகள் மற்றும் உதவி பங்குத்தந்தை அருட்திரு.மகன் அலோசியஸ் ஆகியோரால் குழந்தை யேசுவுக்கு திருப்பலியுடன் கூடிய வழிபாடு நடத்தப்பட்டுவருகின்றது. (100)

இயற்நாலையில் திருட்டு

(சாவகச்சேரி)

வரணி, இயற்நாலைப் பகுதியில் சனியன்று அதிகாலை ஒரு மணியளவில் இரு வேறு வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். ஒரு வீட்டின், முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியும், பெறுமதி மிக்க ஆடைகளும், ஐந்து பவுண் நகைகளும் களவாடப்பட்டுள்ளன. இன்னொரு வீட்டில் இரண்டு துவிச்சக்கரவண்டிகள் களவாடப்பட்டு அதிலொன்று சிறிது தூரத்திற்கு அப்பால் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. (29)

மருதங்கேணியில் மாட்டுவண்டி தடம்புரண்டது

(வடமராட்சி)

வன்னியிலிருந்து நெல்மூடைகளை ஏற்றிவந்த மாட்டுவண்டி, மருதங்கேணி பாலத்தருகில் தடம்புரண்ட சம்பவம் கடந்த வியாழனன்று இடம் பெற்றுள்ளது.

கடந்தகால யுத்த நடவடிக்கையால் சேதமடைந்த இப்பாலத்தினை திருத்தி அமைப்பதில் அதிகாரிகள் பின்னடித்து வருவதால் போக்குவரத்திற்கு மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வண்டில் தடம்புரண்டு வண்டில் சிறு சேத்திற்கு உள்ளான போதிலும் ஓட்டுனர் தெய்வாதீனமாக உயிர்தப்பினார். (23)

வரியோருக்கு விதைநெல் விநியோகம்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் ஆனைக்கோட்டை ஜே/133 கிராம அலுவலர் பிரிவில் உள்ள வறிய - விவசாய குடும்பங்களுக்கு சர்வோதயத்தினால் விதைநெல் வழங்கப்பட்டது. நேற்று முன்தினம் ஆனைக்கோட்டை விவசாயிகள் சம்மேளனத்தின் அலுவலகத்தில் வைத்து விதைநெல் விநியோகிக்கப்பட்டது. (46)

கலப்பில் ஒருவர் காயம்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை பகுதியில் லொறிசாரதிக்கும் இளைஞனுக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில் இளைஞனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது.

லொறியை ஓட்டி வந்த சாரதிக்கும் அவ்வீதியில் வந்துகொண்டிருந்த இளைஞனுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாகமாறியது. சாரதி லொறியை மதுபோதையில் செலுத்தி வந்தார் எனக் கூறப்படுகின்றது. (46)

நவராத்திரி தின நிகழ்வு

(சங்குவேலி)

மானிப்பாய் மருதடி விநாயகர் சனசமூக நிலையத்தினர் நவராத்திரி தினத்தை முன்னிட்டு பேச்சு, நடனம், பட்டிமன்றம், கவிதை போன்ற நிகழ்ச்சிகளை நடாத்த இருப்பதால் மேற்படி நிகழ்வில் பங்கு பற்றுபவர்கள் தமது பெயர் விபரங்களை நிலையத்தின் செயலாளரிடம் பதிவு செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

அமெரிக்காவின் பொருளாதார நலன்கள் தாக்கப்படுமென ஒஸாமா எச்சரிக்கிறார்!

கடவுளும் சாட்சியாக இருக்கிறாராம்

(வொஷிங்ரன்)

அமெரிக்கப் பொருளாதார நலன்கள் தாக்கியழிக்கப்படும் என்று சஊதி அரேபிய 'அல் ஜஸீரா' தொலைக்காட்சி மூலமாக ஒசாமா பின்லாடன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஒஸாமாவின் குரல் என்று சொல்லப்பட்ட அந்த இரண்டுநிமிட உரையில், அமெரிக்கா அடக்குமுறையையும் ஆக்கிரமிப்பையும் நிறுத்தும் வரை அமெரிக்கருடைய இதயங்களில் பயங்கரங்களை ஏற்படுத்துவதுடன் அவர்களுடைய பொருளாதாரக் கட்டுமானங்களும் இலக்குவைக்கப்படும். அதற்காக கடவுளினுடைய பெயரால் இளம் போராட்டக்காரர்கள் தயாராகிவருகிறார்கள் என்றும் அந்த உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க மக்களுக்கு விளித்துக் கூறுகிறேன் என்று அந்த உரையில் சில எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. உங்களுடைய முன்னைய பெருங் குற்றங்களுக்காக நியூயோர்க்கிலும் வோஷிங்டனிலும் நடத்தப்பட்ட தாக்குதல்கள் மூலமாகக் கற்பிக்கப்பட்ட பாடங்களை விளங்கிக் கொள்ளுங்கள்.

இஸ்லாமிய உலகத்தைத் தாக்கி அதனைப் பங்குபோட முற்படும் யூதர்களின் முகவர்களான வெள்ளைமாளிகையில் உள்ள குற்றக் கும்பலின் நடவடிக்கைகள் காட்டுவது யாதெனில் அவர்கள் எவற்றையும் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை என்பதும், மேலும் தாக்குதல்கள் சாத்தியமாகவே இருக்கின்றன என்பதுமாகும்.

இஸ்லாமை உங்கள் இதயங்களில பயங்கரங்களை நிரப்புகிற விடயமாக மாற்றுவதற்கு இஸ்லாமிய இளைஞர்கள் தயார் செய்துவருகிறார்கள். கடவுளே எங்களுடைய சாட்சியாக இருக்கிறார். நீங்கள் அநீதியையும் ஆக்கிரமிப்பையும் நிறுத்தும்வரை உங்களுடைய பொருளாதாரக் கட்டுமானங்களை அவர்கள் தங்கள் பிரதான இலக்காக்குவார்கள் என்று அந்த உரை தெரிவிக்கின்றது.

கட்டாரில் நிலைகொண்டுள்ள சுயாதீன தொலைக்காட்சியாகிய அல்-ஜஸீரா (Al jazeera) ஒஸாமா விடமிருந்து என்று பல தகவல்களை ஒளிபரப்பி வந்திருக்கிறது. ஆனால், இத்தகவல்கள் எவ்வளவுதூரம் உறுதிப்படுத்தப்பட்டவை என்பது தெரியாது.

அமெரிக்க செய்தி ஊடகங்கள் சந்தேகத்துக்கிடமின்றி அது ஒசாமாவின் உரையே என்று தெரிவித்தாலும் ஐரோப்பிய செய்தி ஊடகங்கள் அது ஒசாமாவின் உரை என்பதில் சிறிது சந்தேகத்தை வெளியிட்டன.

பிரிட்டிஷ் அமைச்சர் பிரான்ஸில்

(லண்டன்)

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஜக்ஸ் ஸ்ரோ பிரான்சுக்கு விஜயம் செய்துள்ளார்.

ஈராக் விவகாரம் தொடர்பாக தனது இராஜதந்திர நடவடிக்கைகளைப் புதுப்பிக்கவே அவர் அங்கு சென்றுள்ளார்.

இவ்விவகாரத்தில் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் நிலைப்பாட்டை பிரான்ஸ் கடுமையாக எதிர்த்து வருவது தெரிந்ததே.

இவ்விஜயத்தைத் தொடர்ந்து அவர் எகிப்து, குவைத், ஈரான், ஜோர்தான் ஆகிய நாடுகளுக்குச் செல்லவுள்ளார் எனவும் தெரிய வருகிறது.

ஐவரிக்கோஸ்டில் மீண்டும் சண்டை!

(பாரிஸ்)

ஐவரிக்கோஸ்ட்டில் அரசாங்கத்துக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் முயற்சிக்கப்பட்ட போர்நிறுத்தம் சாத்தியமற்றுப் போயுள்ளது. அரசாங்கத்துக்கு எதிரான தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள குவாக்கே என்ற கிழக்கு ஐவரிக்கோஸ்ட் பகுதியில் சண்டை தொடங்கியுள்ளது.

அந்தப் பிரதேசத்துக்கு நூற்றுக் கணக்கான அரசாங்கத் துருப்புக்கள் அனுப்பப்பட்டுள்ளன. அங்கு கடுமையாக குண்டுச் சத்தங்களும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டதாக ஐவரிக்கோஸ்ட்டிலுள்ள பிரெஞ்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆறு மேற்கு ஐரோப்பிய நாட்டுப் பிரிதிநிதிகளின் தீவிரமான மத்தியஸ்த முயற்சிகளையடுத்து அங்கு கடந்தவாரம் போர்நிறுத்தம் கொண்டு வரப்பட்டிருந்தது.

பொஸ்னியத் தேர்தலில் சீர்திருத்தவாதிகள் வீழ்ச்சி

(லண்டன்)

பொஸ்னியா - ஹர்ச்கோவினாவில் இடம்பெற்ற ஜனாதிபதி, பாராளுமன்ற, உள்ளூராட்சித் தேர்தல்களில் தேசியவாதிகளும் ஏனைய கொள்கைகள் உடையோரும் சமஅளவில் வெற்றி வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்.

அங்கு நடைபெற்ற இத்தேர்தல்களில் கடும் ஒழுங்கீனங்கள் நிலவியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் தற்பொழுது ஆட்சியிலுள்ள சீர்திருத்தவாதிகள் வெற்றியடைவதையே அமெரிக்காவும் மேற்கத்தைய நாடுகளும் விரும்பின. ஆனால் அவர்களுக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை.

தமது பொருளாதார நலன்களை சீர்திருத்தவாதிகள் கவனிக்கத் தவறிவிட்டதனால் தேசியவாதிகளுக்கும் மக்களின் ஆதரவு கிடைத்துள்ளது.

துறைமுகங்களின் வேலைநிறுத்தம்:

அமெ., ஐரோப்பிய ஊடகங்கள் திடீரென மௌனவிரதம்!

அமெரிக்காவின் மேற்குக் கரையிலுள்ள பசுபிக் துறைமுகங்களில் இடம்பெறும் வேலைநிறுத்தங்கள் தொடர்பான செய்திகள், செய்தி ஆய்வுகள் என்பன அமெரிக்க, ஐரோப்பிய ஊடகங்களில் நேற்றுமுன்தினம் காலையில் (இலங்கைநேரப்படி) வெளியாகத் தொடங்கியிருந்தன.

ஆனால், இது தொடர்பான தொடர் செய்திகள், ஆய்வுகள் வெளிவருவதை அமெரிக்க, ஐரோப்பிய இலத்திரனியல் ஊடகங்கள் வியக்கத்தக்க வகையில் முற்றிலும் நிறுத்திவிட்டுள்ளன.

வேலைநிறுத்தத்தில் குதித்துள்ள தொழிலாளர்களுடன் இன்னமும் இணக்கப்பாடு காணப்படவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட வேறு தகவல்கள் தெரிவித்தன.

யேமனில் பிரான்சுக்குச் சொந்தமான எரிபொருள் கப்பல் வெடித்து எரிகிறது!

(யேமன்)

யேமன் நாட்டு கடற்பரப்பில் பெற்றோலிய எரிபொருள் நிரம்பியிருந்த தாங்கியைக் கொண்டிருந்த கப்பலொன்று வெடித்துத் தீப்பற்றி நாசமாகியது.

பிரான்சு நாட்டவருக்குச் சொந்தமான இக்கப்பலுக்குள் நான்கு லட்சம் பீப்பாக்கள் எண்ணெய் இருந்ததாகவும் பெருமளவு எண்ணெய் கடலுக்குள் கலந்துவிட்டது என்றும் செய்திகள் தெரிவித்தன. அத்துடன் இக்கப்பலுக்குள் இருந்தவர்கள் கடலுக்குள் பாய்ந்து தப்பினர். அதில பதின்மூன்று பேரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஈரானிலிருந்து டாக்கா நோக்கிச் சென்று கொண்டிருந்த இக்கப்பலுக்கு அண்மித்து, படகு ஒன்று வந்ததையடுத்தே கப்பல் வெடித்துச் சிதறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெடிபொருள் ஏற்றிவந்த தற்கொலைப் போராளியின் படகாக இருக்கலாமென யேமன் பாதுகாப்பு அதிகாரிகள் ஊகம் தெரிவித்தனர்

ஏற்கனவே கப்பலிலிருந்த எண்ணெய்க் கசிவு காரணமாக ஏற்பட்ட தீ விபத்தால் இந்த அனர்த்தம் நிகழ்ந்ததா அல்லது பயங்கரவாதிகளின் தற்கொலைத் தாக்குதலா என்பதை யேமன் அதிகாரிகளால் உறுதிப்படுத்த முடியவில்லை.

இது தொடர்பான சகல விசாரணைகளுக்கும் பிரான்ஸ் உதவியும் ஒத்துழைப்பும் நல்கும் என்று யேமன் தலைவருக்கு பிரான்ஸ் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் முப்பதாம் திகதி யேமன் துறைமுக மொன்றில் அமெரிக்க போர்க் கப்பலொன்று அல்கெய்டா தீவிரவாதிகளால் தாக்கப்பட்டது தெரிந்ததே.

பிரேஸிலில் இடதுசாரி வெற்றிவாகை சூடுவாரா?

(றியோடிஜெனிறோ)

பிரேசிலில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் இடதுசாரி வேட்பாளர் லுாயிஸ் இனாஸியோ லுலா டா சில்வா முதல் சுற்று வாக்கு எண்ணுதலில் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று முன்னணியிலிருந்தார்.

முன்னர் உலோகத் தொழிலாளியாக இருந்தவரும் தொழிற்சங்கத் தலைவருமான இவர் வெற்றிபெற்றால் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பல மாற்றங்கள் நிகழும் என்று செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்றுக்காலைவரைக்குமாக எண்ணப்பட்ட 50வீத வாக்குகளில் அரைவாசிக்கும் கூடுதலான வாக்குகள் லுலாவுக்குக் கிடைத்துள்ளன.

பிரேசில், இருநூற்றியறுபது மில்லியன்கள் டொலர் வெளி நாட்டுக் கடனை அடைக்க வேண்டியுள்ளது. அத்துடன் பத்து மில்லியன் மக்களுக்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்கவேண்டிய நிலையும் உள்ளது. இவ்விரண்டு பொருளாதாரச் சவால்களையும் புதிதாகத் தெரிவாகும் ஜனாதிபதி சமாளிக்கவேண்டும்.

கடலில் கலக்கும் எண்ணெயினாலும், வளிமண்டலத்தில் சேரும் புகையினாலும் கடும் சூழல் மாசடைதல் ஏற்படுமென யேமன் அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.



யேமனில் முன்னர் தாக்கப்பட்ட யு.எஸ்.எஸ். கோல் என்ற அமெரிக்கப் போர்க்கப்பல்

அகதிகளுக்காக ஜேர்மனியர் ஆதரவுக்குரல்!

(பேர்லின்)

ஆயிரக்கணக்கான ஜேர்மனி நாட்டவர்கள் ஒன்று கூடி அகதிகளாகத் தமது நாட்டுக்குள் வந்திருப்பவர்களின் உரிமைகளுக்காக ஆதரவு வெளியிட்டுள்ளனர்.

தேவாலயங்களின் மதச் சபையினர், தொழிற்சங்கங்கள் என்பன ஒன்று சேர்ந்து ஆயிரக்கணக்கான மக்களின் ஒன்றுகூடலில், ஜேர்மனியில் அகதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற இனவாத நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.

வேறு நாடுகளிலிருந்து ஜேர்மனிக்குள் அகதிகளாக வந்து வாழும் மக்களுக்கான சம உரிமைகளை ஜேர்மனியின் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

அம்மக்களின் ஒத்துழைப்பு இல்லையென்றால் ஜேர்மனியின் சட்டத் துறை அடுத்த பத்து ஆண்டுகளுள் வீழ்ச்சி காணும் என்றும் அவர்கள் எச்சரித்தனர். அத்துடன் ஜேர்மனியில் ஐந்து ஆண்டுகளாக வாழ்ந்த வெளி நாட்டவரை அங்கு நிரந்தரப் பிரஜைகளாக அங்கீகரிக்கவும் அவர்கள் தங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

முதல் விமானம் பறந்தது எப்படி?





இன்று நாம் பறந்து திரியும் விமானங்கள் பல்வேறுபட்டவை. எந்த விமானத்தில் எப்படியெல்லாம் வசதிகள் செய்து தருகிறார்கள் என்றெல்லாம் ஆராய்ந்துதான் அதில் பயணம் செய்கின்றோம்.

இத்தகைய விமானப்பறப்புக்களுக்கு அத்திவாரமிட்டவர்கள் ரைட் சகோதரர்கள் என்பது எமக்கு தெரியும். ஆனால் அதற்காக அவர்கள் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. 1901 ஒகஸ்ட்டில் ரைட்சகோதரர்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள். இனிமேலும் எம்மால் விமானங்களை உருவாக்கி அதில் மனிதன் பறப்பான் எனக் கற்பனை செய்து பார்க்க முடியாது என்பதே இதற்குக்காரணம் அவர்கள் கஷ்டப்பட்டு உருவாக்கிய 22 அடி நீளமான செட்டை களை கொண்ட மாதிரி விமானத்தை பறக்கவிட முயன்றபோது அது வீழ்ந்து நொருங்கி ஒரு உயிரையும் பலி கொண்டு விட்டமை யேயாகும். இந்த விரக்தியில் ரைட் சகோதரர்களில் ஒருவரான வில்பர் கூறிய கருத்து "ஆயிரம் வரு ஷங்களானாலும் மனிதனால் வானில் பறக்க முடியாது" என் பதாகும்,

எனினும் இரண்டு வருடங்களுக்கு பின் 1903 டிசம்பர் 17ஆம் திகதி ரைட் சகோதரர்கள் தாம் உருவாக்கிய விமானத்திலேயே விண்ணில் பறந்தனர். நாணயம் சுண்டிப்பார்த்து விமானத்தை செலுத்தி செல்லும் அதிர்ஷ்டத்தை ஒவில் ரைட் பெற்றார். பாவம் வில்பர் ரைட் தரையில் நின்று முதலில் ஒரு மனிதன் இயந்திரம் மூலம் விண்ணில் பறப்பதை பார்த்துக்கொண்டு நிற்க வேண்டியதாயிற்று. பனிக்காற்று வீசிய காலையில் விமானம் பறந்ததை படம் பிடித்துக் கொண்டார் வில்பர்ரைட். தன்கையால் தள்ளிசென்று பறக்கவிட்ட விமானம் இப்போது வானில் பறப்பதை வில்பர் நம்ப முடியாது பார்த்துக்கொண்டு நின்றார்.

ஒரு நூற்றாண்டு கழிந்துவிட்ட பின்னரும் நிபுணர்களால் நம்ப முடியாமல் இருப்பது என்னவெனில் கல்லூரிப்படிப்பே இல்லாத சாதாரண மனிதர்களான இவர்களால் பலவருடகால மனிதக்கனவை நிறைவேற்ற முடிந்தது என்பதே.

பட்டங்களை ஆரம்பத்தில் ஏற்றிப்பார்த்து பின்னர் 605 கிலோ நிறையுடைய பறக்கும் இயந்திரத்தை எப்படி பறக்கவிட்டனர் என்பதே அவர்களுக்கு வியப்பாக இருந்தது. 120 அடி உயரத்தில் 12 செக்கன்கள் இந்த முதல் விமானம் ஒவில் ரைட்டை சுமந்தபடி பறந்திருக்கின்றது.

அவர்களின் கடின உழைப்பில் இன்று நாம் சொகுசாக பயணிக்கின்றோம் அல்லவா?



ரைட் சகோதரர்கள் உருவாக்கிய விமான இயந்திரத்தின் வடிவம்





காதல் என்பது
அழித்து அழித்து
எழுதமுடியாத
கரும்பலகை ~ அந்தக்
காதல்
இல்லை என்றால்
இரும்பை
உருக்கும்
உலகைச்
சுருக்கும் ~ அவர்கள்
இதயம்
நொருங்கும்
காதல் என்பது
நாறு வயதானாலும்
முதல் சந்திப்போ
நேற்றுப்போல் அல்ல
என்றும்
இன்றுபோலவே
இருக்கும்.
காதல் என்பது
நேற்று என்றால்
அது என்றும்
இன்று என்றே
பொருள் தரும்
காதல் என்பது
ஒரே ஒரு
முத்தத்திற்காக ~ தன்
முற்றத்தையே
துறப்பது.
விழிகளால்
விளக்கேற்றி
இதழ்களால்
நெய்யூற்றி
பள்ளியறைப்
பாடங்களை
உயிர்மை தொட்டு
இளமையில்
ஒற்றிக்கொள்வது.
காதல்
என்பது
விலக விலகத்
தொடரும்
தொடரத்
தொடர
விலகும்
காதல் என்பது
உயிர்வரை
பாய்கின்ற உருவமே இல்லாத
மன்மத அம்புகள்

மாதவி

சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்

அங்கம்-02

14 வயதில் சார்லீசாப்ளின்

ஹன்னாவுக்கு குழந்தை பறிபோன துயர் ஒருபுறம், வருமானம் இல்லாமல் வறுமை ஒரு புறமாக வாட்டி எடுத்தது. அவளுக்குத் தஞ்சம்புக எவரும் இருக்கவில்லை.

வாழ்க்கையே அழிவின் பாதையில் சிக்கியிருந்தபோதும் ஹன்னா தோல்வியை ஒப்புக் கொள்ளவில்லை. ஹன்னா உறுதி தளர்ந்து போயிருந் திருப்பானேயானால் விக்டோரியா காலத்து லண்டன் நகரின் வறுமையில் தொலைந்து போன சிறுவர்களில் ஒருவனாகத்தான் சார்லி சாப்ளின் இருந்தி ருப்பார்.

தனிமையும் ஏழ்மையும் ஹன்னாவை வாட்ட ஆறுதலுக்காக முதச் சேவைகளில் தனது கவனத்தைத் திருப்பினாள். தேவாலயப் பெண்களுக்கு ஆடை தைத்துக் கொடுத்தும் கொஞ்சம் வருமானமும் பெற்றாள்.

அக்காலத்தில் வறுமையின் உச்சத்தில் இருந்த தம்மையும் ஏழைகளின் விடுதிக்குள் தள்ளிவிடுவார்களோ என்ற அச்சம் ஹன்னாவுக்கு எழுந்தது. இதனால் அதிக வருமானத்தைத் தேடி வேறேதும் செய்ய வேண்டிய கட்டாயம் அவளுக்கு ஏற்பட்டது.

இசையரங்குகளில் தனது திறமைகளைக் காட்டிப் பிழைப்பதைத் தவிர அவளுக்கு வேறெந்த வழியும் இருக்கவில்லை. இதனால் மீளவும் இசையரங்குக்குள் பிரவேசிக்க முடிவு செய்தாள்.

இசையரங்கில் பாட முயன்றபோது அவளால் முடியாது போனது. குரல் உடைந்து போயிருந்தது. பாட முயன்றபோது பார்வையாளர் அரங்கில் இருந்து எழுந்த கேலி, பரிகாசங்களால் மேடையில் இருந்து இறங்கி ஓட வேண்டியேற்பட்டது.

அங்கே தான் சார்லி சாப்ளின் வாழ்க்கையில் திருப்பம் நிகழ்ந்தது. கூச்சலைக் கேட்ட அரங்க மேலாளர் திகைத்தார். அப்போது ஓடத்தயாராக இருந்த சார்லியைப் பார்த்தார். ஒன்றுமில்லாததற்கு அவனே மேல் என்ற முடிவுடன் அவர் சார்லியின் கைகளைப் பற்றி மேடைக்கு அழைத்து வந்தார்.

சார்லிக்கு அப்போது வயது ஐந்து. ஒரு சிறுவன் தங்களை நோக்கி விழித்துக் கொண்டு நிற்பதைப் பார்த்த பார்வையாளர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள். ஆனால் சார்லி தொழில் முறை கலைஞர்களுக்கும், மேடை நிகழ்ச்சிகளுக்கும் இடையே வளர்க்கப்பட்டவனாதலால் தைரியமாக மேடையில் நின்று பாடத் தொடங்கினான்.

ஆரவாரம் செய்த பார்வையாளர்கள் மகிழ்ந்து அவனை இன்னொரு பாட்டுப் பாடச்சொல்லி மேடையை நோக்கி நாணயங்களை வீசினர். நாணயங்களைத் திரட்டி எடுத்துக் கொண்ட பின்னர்தான் தொடர்ந்து பாடமுடியும் என்று சார்லி அமைதியாகச் சொன்னதும் அரங்கில் மறுபடியும் பலத்த சிரிப்பலை எழுந்தது.

எல்லா நாணயங்களையும் திரட்டித் தருவதாக புன்முறுவலுடன் அரங்க மேலாளர் சார்லிக்கு வாக்களித்தார். அவனை மேடையில் இருந்து அழைத்துச் செல்லும் வரை அவன் ஆடி, பாடி மற்றவர்களைப் போல் நடித்துக் காட்டி தானும் அநுபவித்து மற்றவர்களையும் மகிழ்வித்துக் கொண்டிருந்தான்.

இந்த இரவுக்குப் பின்னர் ஹன்னா இன்னும் ஒரே ஒரு பொது நிகழ்ச்சியில் மட்டுமே பங்கு பெறுவதாக இருந்தது. ஆனால் சார்லிக்கோ அது உலகம் முழுவதும் அவனைப் புகழ்வாகை சூடச் செய்யும் கலை வாழ்க்கைக்கான ஆரம்பமாக இருந்தது.

தங்களிடமிருந்த சில விலை உயர்ந்த பொருட்களையெல்லாம் ஹன்னா கொஞ்சம் கொஞ்சமாக விற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டாள். பின், தேவையான பொருட்களை விற்கும் நிலையும் வந்தது. ஹன்னாவின் உற்சாகப் போக்கு மட்டும் இல்லாதிருந்தால், அவர்கள் வாழ்க்கையே நரகமாயிருக்கும். அவர்களின் எளிமையான அறை பகட்டான மேடையாக மாறிவிட்டதாகத் தோன்றியது. இரண்டு சின்னப் பார்வையாளர்களுக்காக அவள் ஆடினாள், பாடினாள், நாடகங்கள் நடித்துக் காட்டினாள். பைபிள் கூறி அவர்களை நெகிழ வைத்தாள்.

எப்படியோ சார்லிக்கும், சிட்னிக்கும் உடையும் உணவும் கொடுத்து அவர்களைச் சுத்தமாகவும் இதமாகவும் வைத்திருந்ததோடு, அவர்களுக்கு ஹன்னா காமிக் புத்தகங்களும், சில சமயங்களில் காலை சிற்றுண்டிக்கு ஒருவகை கடல் மீனும் கொடுத்தாள். ஆனால் அவர்களை மதிப்பாக உடுக்கச் செய்ய வேண்டி ஹன்னா செய்த முயற்சிகள் அவ்வளவாக வெற்றி பெறவில்லை. அவளுடைய பழைய நாடக உடைகளை ஒன்று சேர்த்து அவர்களுக்கு ஆடை தயாரித்தாள். சரியாகத் தைக்கப் படாத உடையில் அந்த இரு சிறுவர்களும் இரக்கமற்ற முறையில் கேலிக்குள்ளானார்கள். குதிரைகள் இழுக்கும் பேருந்துகளில் தாவிக் குதித்து, படிகளில் விரைந்து ஏறிச்சென்று செய்தித்தாள்கள் விற்று, கொஞ்சம் பணம் சம்பாதிக்க முயன்றான் சிட்னி.

(அடுத்த அரங்கில் தொடரும்)

ஜப்பானின் மின்சாரக்கார்

ஜப்பான் கீயோ பல்கலைக்கழகத்தின் சூழலியல் தகவல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் சீமுசுவும் அவரது குழுவினரும் இணைந்து உருவாக்கிய மின்கலத்தில் இயங்கும் மோட்டார் வாகனம் ஜப்பானிய வீதிகளில் தற்போது ஓட ஆரம்பித்துள்ளது.

எட்டு சக்கரங்கள் பொருத்தப்பட்ட இந்தக்கார் லித்தியம் மின்கலத்தின் சக்தியில் ஓடக்கூடியது. இவ் வாகனம் 300 கிலோ மீற்றருக்கு மின்கலத்தை மீள் சக்தியூட்டாது(Recharging) ஓடக் கூடியது KAZ சூப்பர் EV எனும் பெயர் கொண்ட இவ் வாகனத்தின் வேகம் மணிக்கு 311 கிலோமீற்றர்.

திருகோணமலையில் அந்நியரின் ஆதிக்கச் சின்னமாக உள்ளது பிரெட்ரிக் கோட்டை. வரலாற்று முக்கியம் வாய்ந்த கோணேசர் ஆலயம் - சிறிலங்கா இராணுவ 2வது கஜபா படைப்பிரிவு தலைமையகம், திருகோணமலை அரச அதிபர் செயலகம், தொலைபேசி பரிவர்த்தனை நிலையம், மான்களின் புகலிடம், ஒரு பௌத்த விகாரை என்பன இந்தக் கோட்டையில் உள்ளன.

1676 இல் போர்த்துக்கீசர் இந்தக் கோட்டையைக் கட்டினார். ஒல்லாந்தர், பிரெஞ்சியர், ஆங்கிலேயர் என கைமாறிய கோட்டை தற்போது சிறிலங்கா படையிடம் உள்ளது. பிரிட்டிஸார் இதன் முன்புறத்தில் பீரங்கிகளை நிறுவினர். ஐரோப்பிய படையினருக்கு சிறந்த காப்பரணாகவும் கடல் கண்காணிப்பு இடமாகவும் பிரெட்ரிக் கோட்டை விளங்கியது.

பிரிட்டனின் முக்கிய பிரமுகரான யோர்க்கின் பிரெட்ரிக் டியூக்கின் நினைவாக இக் கோட்டைக்கு பிரிட்டிஸ் அரசு பிரெட்ரிக் என்ற பெயரை சூட்டியது.

கோட்டையின் முன்பக்கத்தை படம் பிடிக்க இராணுவத்தனர் அனுமதிக்காததால் உட்புறமிருந்து பிடிக்கப் பட்ட வாசல் படம் இது

அறிதிரு

ரஷ்யாவில் ஜார் மன்னர் ஆட்சி நடந்து கொண்டிருந்த காலம்அது. அப்போது மக்கள் மிருகங்களைப் போல மதிக்கப் பட்டார்கள். பஞ்சம், பட்டினி கோலோச்சிக் கொண்டிருக்க ஜார் மன்னன் மட்டும் சந்தோசமாகக் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தார்.

அரசாங்கத்துக்கு விரோதமானவர்கள் என ஜார் மன்னரின் ஒற்றர்களாக அறியப்பட்டவர்கள் சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டார்கள். எதிர்த்துக் கதைத்தவர்களின் தலைகள் சீவப்பட்டன.

ஒருமுறை மூன்று பேர் சைபீரியாவுக்கு நாடு கடத்தப் பட்டார்கள். ஏற்கனவே நாடுகடத்தப்பட்ட பலர் அங்கே இருந்தனர். மூவரும் சைபீரியாவுக்கு சென்ற போது அங்கிருந்த கைதிகள் முதலாமவரைப் பார்த்து "உன்னை ஏன் நாடு கடத்தினார்கள்?" எனக் கேட்டனர்.

உடனே அவர் "நான் X என்பவரை எதிர்த்துப் பேசியதற்காக நாடு கடத்தினார்கள்" எனப் பதிலளித்தார்.

இதே கேள்வி இரண்டாவது நபரிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் "என்னை x என்பவரைஆதரித்துப் பேசியதற்காக நாடு கடத்தினார்கள்" எனப் பதிலளித்தார்.

மூன்றாவது ஆளிடம் இதே வினா எழுப்பப்பட்டது. அவர் "அந்த x என்ற நபரே நான் தான்" என்று பதில் கொடுத்தார்.

நன்றி:-சிரித்திரன்

நல்லதொரு குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்

இன்று எமது சமுதாயத்தை நோக்கும்பொழுது; விஷேடமாக மனிதனை நோக்கும்பொழுது; மனிதக் குழந்தையைப்போல் முடியாத தன்மையுடன் பிறக்கும் பிராணி வேறொன்றும் இல்லை எனலாம். நான் ஏன் அப்படிச் சொல்கிறேன் என வாசகர்கள் சிந்திக்கலாம். எல்லாப் படைப்பிலும் உயர்ந்த படைப்பு மனிதன் தானே எனச் சிந்திக்கலாம். அது உண்மைதான். ஆனால் மனிதன் பிறக்கும் பொழுதே எல்லாத் திறமைகளும் நிரம்பியவாறு பிறப்பதில்லை. மிருகம் பிறந்ததும் சிறிது நேரத்தில் தானாகவே எழுந்து நிற்கிறது. ஓடுகிறது. பால் குடிக்கின்றது. மனிதக் குழந்தை அப்படியல்ல. பிறந்த குழந்தை பெற்றோர், பெரியவரின் உதவியுட னேயே படிப்படியாக இவற்றைச் செய்யப் பழகுகிறது. ஆகவே பிள்ளை மனிதரைப் போன்று பேச, ஓட, குடிக்க, உணவு உண்ணப் பழக பெரியவரின், மற்றவரின் உதவி தேவை என்பது புரிகிறது அல்லவா?

மிருகத்தின் குட்டிகள் சாப்பிட, குடிக்க இயற்கையாகப் பழகிவிடும். ஆனால் மனிதக் குழந் தையோ அவ்வாறல்ல. எல்லாவற்றையும் பழக வேண்டும். நல்ல நிலைப்புள்ள பழக்கங்களைப் பெற வேண்டுமானால் அக்குழந்தை பழகிக் கொள்ள வேண்டும். ஆகவே இதைப் பழக குழந்தைக்கு குடும்பம் என்ற ஸ்தாபனம் தேவைப்படுகிறது.

குடும்பம் என்று கூறியதும் அதன் சரியான அர்த்தத்தை புரிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும். ஒரு வீட்டில் கணவன், மனைவி, பிள்ளைகள் ஒன்றாக வாழ் கின்றார்கள் என்பதற்காக அதைக் குடும்பம் என்று கூற முடியாது. அப்போ குடும்பம் என்பதன் அர்த்தம் என்ன. கணவன், மனைவி, பிள்ளைகளுக்கிடையில் நல்ல அன்புத் தொடர்பு இருக்க வேண்டும்.

இதைத்தான் குடும்பம் எனலாம். முதலில் கணவனுக்கும் மனைவிக்குமிடையில் நல்ல ஸ்திரமான அன்புத் தொடர்பு இருக்க வேண்டும். அதே போன்று பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையில் நல்ல அன்புத் தொடர்பு இருக்க வேண்டும். பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் இடையில் நல்ல அன்புத் தொடர்பு இருக்க வேண்டும். இத்தொடர்பு மற்றவர்களுக்கு நன்றாகத் தெரிதல் வேண்டும். இவ்வாறு நல்ல தொடர்பு இருக்கும் குடும்பத்தையே குடும்பம் என்று கூறலாம்.

எமது சரீரத்துக்கு நல்ல சத்துள்ள உணவு, இளைப்பாறுதல், நித்திரை கிடைத்தால் சரீரம் தானாக வளர்ந்து விடும். ஆனால் மன, ஆன்மீக வளர்ச்சிக்கு நல்ல அன்புத் தொடர்பு தேவை.

எமது அன்புறவுக்கு கலாச்சாரமும் ஓரளவுக்கு பங்கு

கொள்கின்றது எனலாம். அது எப்படி? எம் ஒவ்வொரு வருக்கும் கலாசாரப் பண்புகள் மனதில் பதிந்துள்ளன. நாம் இலங்கையில் வாழும் தமிழர்கள் என நினைத்துக் கொண்டால் எமக்குப் பொதுவான கலாசாரம் உண்டு. ஒவ்வொரு பிரதே சத்துக்கும் வேறுபட்ட பண்புகளும் உண்டு. அதே போல ஒரு குடும்பத்தில் உள்ள பண்பு மற்றக் குடும்பத்தில் வேறுபடலாம். இதனை உபகலாச்சாரம் அல்லது கிளைக் கலாசாரம் எனலாம்.

சில குடும்பங்களில் அப்பா தலைமைப் பொறுப்பையும், சில குடும்பங்களில் அம்மா தலைமைப் பொறுப்பையும் எடுப்பார். இதுவும் உபகலாச்சாரமே. இது குடும்பத்துக்கு குடும்பம் வேறுபடலாம்.

சிலர் மிருகத்துடன் குடும்பத்தை ஒப்பிட்டு குடும்பம் என்பது சந்ததியைப் பெருக்க, இன விருத்தி செய்ய மட்டும் இருப்பது என்று எண்ணுவர். இது பிழை யான கருத்தாகும். இதைவிடப் பரந்த நோக்கம் குடும்பத் துக்கு உள்ளது.

விவாகத்தில் சரீரம் மட்டுமல்ல, உடலுறவு மட்டுமல்ல, மனம், கலாசாரம் போன்ற பல பண்புகள் கலந்துள்ளன. இவை நல்ல தொடர்புக்கு உதவுகின்ற விதத்தில் அமைதல் வேண்டும்.

(மிகுதி அடுத்த வாரம்)

எஸ்.ஜே.யோகராசா

தலைச்சுற்றும் மயக்கமும்



வெப்பமான வானிலை மற்றும் காற்றோட்டமில்லாத அறைகள் இவை தலைச்சுற்றலை ஏற்படுத்துகின்றன. எனினும் தலைச்சுற்று, மயக்கம் இவற்றிற்குப் பல காரணங்கள் உள்ளன.

திடீரென இருக்கையிலிருந்தோ, கட்டிலில் இருந்தோ எழும்போது கூடுதலான இரத்தம் கால்பகுதி நோக்கிச் செல்வதால் தலை சுற் றுவது போல் இருக்கும்.

கூடுதலாக வேலை செய்தல், உதாரணமாகப் பாரமான பொருட்களைத் தூக்குவது, மற்றும் மலச்சிக்கல் போன்ற காரணங்களாலும் தலைச்சுற்று ஏற்படலாம்.

அதிர்ச்சி,பயம், வலி, உணர்ச்சிவசப்படுதல் என்பவற்றால் குருதி அமுக்கம் சடுதியாகக் குறைகிறது. இதனாலும் தலைச்சுற்று ஏற்படும்.

வேறு காரணங்களாக நீரிழப்பு, சில மருந்துகள், குருதியில் குளுக்கோசின் அளவு குறைவாக இருத்தல் என்பன அமைகின்றன.

தலைசுற்றுவது போல் தோன்றினால் பக்கத்தில் இருப்பவரிடம் கூறிவிட்டு, நிலத்தில் முழங்கால்களிடையே தலையைப் புதைத்தபடி அமர வேண்டும்.

யாராவது மயக்கமுற்றவர்களுக்கு நீங்கள் உதவி செய்யும் பட்சத்தில், அவர்களைப் பாதுகாப்பாக அமர்த்திவிட்டுப் போதுமான காற்றுக் கிடைக்கும்படி செய்யவும்.

அடிக்கடி அல்லது குறிப்பிட்ட காரணங்கள் ஏதுமின்றி தலைச்சுற்று ஏற்பட்டால் அல்லது மயக்கமுற நேர்ந்தால் மருத்துவரை நாடவும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

சிந்தனைக்கு

நேர்மையும், நம்பகத்தன்மையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்.

-ஜோன் ஸ்ரீபன்

நமது நோக்கு

மாற்றான் தாய் மனப்பாங்கா?

திருகோணமலைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் ஊடுருவியபோது கைது செய்யப்பட்ட ஆறு இராணுவத்தினரையும் விடுவிக்குமாறு கோரி, போராட்டம் நடாத்திய சிங்கள மக்களைச் சந்தித்து அவர்களைச் சமாதானப்படுத்துவதற்காக அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையில் உயர் மட்டக்குழு ஒன்று நேற்று முன்தினம் திருமலைக்குப் பறந்து சென்றது.

இந்தக் குழுவில் மிலிந்த மொறகொடவுடன், அரசின் சமாதான செயலணியின் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக, இராணுவத்தளபதி உட்பட பலரும் இடம்பெற்றிருந்தனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் கூறுவதன்படி- புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயலில் ஈடுபட்ட படையினரே அவர்களால் கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் கைது செய்யப்பட்டு ஒரு சில தினங்களிலேயே, சிங்கள மக்கள் திருமலையில் திரண்டு போராட்டம் நடத்தி வருவதும் - அவர்களைச் சமாளிக்க, போராட்டம் நடத்துபவர்கள் அழைக்காமலேயே அரசின் உயர் மட்டக்குழு அங்கு பறந்து சென்றதும் - மக்களிடையே வினாக்களை எழுப்பியுள்ளது.

களுத்துறைச் சிறைச்சாலையில் ஆண்டுக் கணக்காக எதுவித விசாரணைகளுமின்றி வாடும் தமிழ் அரசியல் கைதிகள் - தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு, தாம் எதுவித விசாரணைகளுமின்றித் தடுத்துவைக்கப்பட்டிருப்பதற்கு எதிர்ப்புத்தெரிவித்து, தம்மை நிபந்தனைகளின்றி விடுதலை செய்யுமாறு குரலெழுப்புகையிலும்-

சாகும்வரை தமது உண்ணாவிரதப் போராட்டத்தில் உடல்நிலை பாதிப்படைந்து அவர்கள் உயிருக்குப் போராடுகையிலும் -

அமைச்சர் மிலிந்த மொறகொட தம்மைச் சந்திக்க வேண்டுமெனவும், அவரைச் சந்தித்து தமது நிலையை அவருக்குப் புரியவைக்க சந்தர்ப்பம் ஒன்று தருமாறும் அவர்கள் மிகவேண்டி நின்ற போதும் -

அதைப்பற்றி - இந்த ஆசிரியர் தலையங்கம் எழுதப படும் வரை- கவனம் சிறிதும் காட்டாதவர்கள் - திருமலைக்கு அதிவேகத்தில் பறந்துசென்று - திருமலை சந்தை வீதியில் அடிபணிந்து பேசுவது வியப்பையும், வேதனையையும் எமது மக்களுக்குத் தருகின்றது.

சிங்கள மக்கள் குழம்பக்கூடாது, அவர்கள் மனம்நோகக்கூடாது என ஆதங்கப்படும் அரசாங்கம்-அந்தக் கருணையில் சிறிதளவாவது களுத்துறைச்சிறையில் வாடும் எமது சகோதரர்களிடம் காட்டவில்லை என்பது - 'பழைய குருடி கதவைத் திறவடி' கதை இன்னும் மறையவில்லையோ என்ற சந்தேகத்தை மக்கள் மனதில் விதைக்கின்றது.

இந்தச் சந்தேகத்தைப்போக்கி- உடனடியாக சிறைகளில் வாடும் எமது சகோதரர்களை விடுவிக்க அரசாங்கம் உடனடியாக ஆவன செய்ய வேண்டும்.

தமிழ்மக்களுடன் உண்மையான சமாதானத்தையும் சக வாழ்வையும் உறுதிப்படுத்த - அரசாங்கம் அரசியல் கைதிகளின் போராட்டத்தை மதித்து, அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

இன்றைய சமாதான சூழலில் தான் முன்னெடுக்கும் அமைதி முயற்சிகளில் உண்மையான வீசுவாசமும், நேர்மையும் அரசாங்கத்துக்கு இருக்கும் பட்சத்தில், அதனை தமிழ் மக்களிடம் வெளிப்படுத்த இந்த வாய்ப்பை அரசாங்கம் பயன்படுத்த வேண்டும்.

அரசாங்கம் அவ்வாறு செய்யத்தவறின், அது மாற்றான் தாய் மனப்பான்மையுடனேயே தமிழர்களை இன்னும் நோக்குகின்றது என்பதே அதனூடாக வெளிவரும் செய்தியாக இருக்கும்.

எனவே உடனடி நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டு, தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்து - தனது நம்பகத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும் என தமிழ் மக்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

இரண்டாம் சுற்றுப் பேச்சுக் குறித்து ரணிலுடன் வெஸ்ட்பேர்க் சந்திப்பு

(கொழும்பு)

இரண்டாவது சுற்றுப்பேச்சுக்களில் புலிகளுடன் இணக்கம் காணக்கூடிய விடயங்கள் குறித்து ஆராயும் நோக்குடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் சந்தித்துப் பேசியுள்ளார்.

இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களில் இலகுவாகத் தீர்க்கப்படக்கூடிய பிரச்சினைகள் குறித்து இருவரும் ஆராய்ந்துள்ளனர். இந்தச் சந்திப்பில் வெஸ்ட்பேர்க் மற்றும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் ஆகியோர் வன்னிக்குச் சென்று புலிகளுடன் நடத்தவுள்ள பேச்சுக்கள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

அரசின் சார்பில் புலிகளுக்குத் தெரிவிக்கப்படவுள்ள கருத்துக்களை இவர்கள் புலிகளிடம் எடுத்துச் செல்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான புலிகளின் கருத்து ஹெல்கிசன் குழுவினரால் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படும்.

அத்துடன் கட்டுநாயக்கா ஊடாக புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வன்னிக்குச் செல்வது தொடர்பான பயண ஏற்பாடுகள் குறித்தும் ரணில் விக்கிரமசிங்கவுடன் வெஸ்ட்பேர்க் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் தமிழ்ச்செல்வன் பங்கேற்கலாம்!

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேயான அடுத்த கட்ட பேச்சுவார்த்தைகளின்போது விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்து கொள்ளலாம் எனக் கொழும்பு வட்டாரங்களில் தீவிரமாகப் பேசப்படுகின்றது இதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இம்முறை பேச்சுவார்த்தை நடைபெறும் நாட்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இம்மாதம் 31ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 4ஆம் திகதிவரை பேச்சுவார்த்தைகள் நடைபெற உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினரின் பஸ் மோதியதில் திருமலையில் இளைஞர் ஒருவர் பலி!

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை மாவட்டம் உப்புவெளிச் சந்தியில் கடந்த சனிக்கிழமையன்று கடற்படையினரின் பஸ் மோதியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

குச்சவெளி கடற்படை முகாமிலிருந்த கடற்படையினரை ஏற்றிவந்த பஸ் உப்புவெளிச் சந்தியில் இளைஞர் ஒருவரை மோதியது. கடற்படையினரின் பஸ் மோதியதில் படுகாய மடைந்த இளைஞர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

கடற்படையினரின் பஸ் இளைஞரை மோதிக் காயப்படுத்தியதையடுத்து அப்பகுதியில் கூடிய பொதுமக்கள் அந்த பஸ்ஸின் கண்ணாடிகளை அடித்து நொருக்கி சேதம் விளைவித்தனர்.

ஆத்திரமுற்ற மக்கள் பஸ்ஸை தீயிட்டு எரிக்க முற்பட்ட போது பொலிஸார் தலையிட்டு அவர்களை சமாதானப்படுத்தியதால் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

உசனில் படையினர் எடுத்துச் சென்ற மின்பிறப்பாக்கியை மீள வழங்குக!

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை

(நாவற்காடு)

அண்மையில் ஏற்பட்ட இடப்பெயர்வின்போது படையினரால் எடுத்துச் செல்லப்பட்ட, உசன் பகுதிக்கு மின்சாரம் வழங்கிய மின்பிறப்பாக்கியினை மீளப்பெற்று மின்சாரம் வழங்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைக்குழு உறுப்பினர் கேட்டுள்ளார்.

மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கவும், ஏனைய தேவைகளுக்கும் இந்த மின்பிறப்பாக்கி மூலமே முன்னர் மின்சாரம் வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (92)

உதவி மருத்துவர்கள் வேலை நிறுத்தம்; 623 வைத்தியசாலைகள் ஸ்தம்பிதம்!

அரசாங்க உதவி மருத்துவர்களும் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களும் நேற்று நான்காவது நாளாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த மருத்துவர்கள் அநேகமாக கிராமிய வைத்திய சாலைகளிலேயே கடமையில் ஈடுபட்டுள்ளவர்களாவர். இவர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளமையால் சுமார் 623 வைத்தியசாலைகளில் வைத்தியப் பணிகள் ஸ்தம்பித மடைந்துள்ளன.

உதவி மருத்துவர்களின் வேலை நிறுத்தத்தால் நோயாளர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர்.

தெல்லிப்பளை புற்றுநோய் சிகிச்சை நிலையம் இயங்காதிருப்பது பற்றி மக்கள் விசனம்!

(வலி-வடக்கு)

தெல்லிப்பளை புற்றுநோய் சிகிச்சை நிலைய புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாகியும் அதனைத் திறந்து வைத்து இயங்கச் செய்வதில் தாமதம் நிலவுவது குறித்துப் பொது மக்கள் மத்தியில் பெரிதும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதி புற்றுநோயாளர்கள் புற்றுநோய்க்கான சிகிச்சை பெறுவதில் எதிர்நோக்கும் கஷ்டநஷ்டங்கள் கொஞ்சநஞ் சமல்ல. கொழும்பு மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்குச் சென்றுதான் அவர்கள் சிகிச்சை பெற வேண்டிய கட்டாயத்தினால் தகுந்த சிகிச்சை பெற முடியாமல் அவர்கள் படும் வேதனை தொடர்கதையாகவே இருந்துவருகிறது.

இந்நிலையில் தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலை வளவில் அமைக்கப்பட்ட புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை இயங்கவே முடியாத நிலையில் இருந்துவருகிறது. அண்மைக் காலமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் சுகாதார திணைக்களம் நிதி ஒதுக்கீடு செய்து சேதமடைந்த இப்புற்று நோய் சிகிச்சை நிலையம் தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு வேலைகள் பூர்த்தியாகியுள்ளன.

ஆனால் இந்நிலையத்தை - இயங்கச் செய்வதற்கு உடனடியாக வெளிநோயாளர் பிரிவுவசதி, விடுதிவசதி, குடிநீர் வசதி போன்றவற்றைச் செய்து முடிக்க வேண்டியிருக்கிறது. அவற்றைச் செய்வதற்கு 50 லட்சம் ரூபா வரை தேவை என வலி.வடக்கு பிரதேச சபை அதிகாரிகள் மதிப்பீடு செய்துள்ளனர்.

அவ்வாறான நிதியுதவி கிடைத்தால் இத்தேவைகளையும் நிறைவேற்றி புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை இயங்கச் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு நிதியுதவி கிடைத்து வேலைகள் இடம்பெறுமா? புற்றுநோய் சிகிச்சை நிலையம் விரைவில் செயற்படுமா? புற்றுநோயாளர்கள் நீண்ட காலமாக அனுபவிக்கும் துன்பங்கள் தீருமா? எனப் பொதுமக்கள் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள். (105)

கம்யூனிச அரங்கில் சுயநிர்ணயமும் இலங்கையில் தரகு முதலாளித்துவமும்

பகுதி 2

சுயநிர்ணயம் - ஒரு பார்வை

சுயநிர்ணயம் பற்றிய உலகக் கருத்தியல்கள் அன்று இருதுருவப்பட்ட சர்வதேச அரசியல் அரங்கில் - அதாவது 1917 தொடக்கம் 1989 வரையான காலப்பகுதியில் சோவியத் ரஷ்யாவின் புரட்சியை பலப்படுத்தவும் நின்றுநிலைக்கவும் லெனின் அக்கால கட்டத்திலிருந்த காலனித்துவ ஏகாதிபத்திய அரங்கிலிருந்து அக்டோபர் புரட்சியை காப்பாற்ற நீண்ட தொலைநோக்கு பார்வையுடன் காலனித்துவ விடுதலை பற்றிச் சிந்தித்திருந்த போதும், செயற்பட்டபோதும் ஒரு வகையில் சுயநிர்ணய உரிமைக் கருத்தியலின் தந்தையாக லெனின் பல காலம் வருணிக்கப்பட்டபோதும் இதற்கு மாறாக - 1913 இல் ஸ்டாலின் மிகவிரிவாக சுயநிர்ணய மூலமும் தீர்மானிக்க வேண்டும் என - ஸ்டாலின்- குறிப்பிட்டுள்ளமை இங்கு நோக்கத்தக் கதாகும்.

இந்த வகையில் ஸ்டாலின் சுயநிர்ணயம் பற்றிய கலந்துரையாடலில்- பொருளாதார ரீதியான சுயநிர்ணயத்தில் அதிக கவனம் செலுத்தியிருப்பதனை நாம் நன்கு கவனிக்க வேண்டியதொன்றாகும். இந்த வகையில் தேசியத்தை வரையறை செய்கின்ற அனைத்துப் பிரிவினருக்கும் தேசிய பொருளாதாரம் பற்றியதும் அப்பொருளாதாரம் தங்கியிருப்பு பொருளாதாரத்திற்கு அப்பால் நின்று நிலை பெற வேண்டும் என்பதும் இங்கு நோக்கத்தக்கதாகும்.



இலங்கை காலனித்துவத்திலிருந்து விடுதலை பெற்ற போது

1917இன் பின் இருதுருவங்களாக்கப் பட்ட சர்வதேச அரசியலில் பாட்டாளி வர்க்கமானது- அன்றைய சமூகத்தில் செல்வப் பகிர்வின் சமமின்மையாலும், உலக மூலதனம் ஒரு சில ஏகாதிபத்திய நாடுகளிடம் இருந்ததால் உலகில் தமது உழைப்பை கொடுத்து அதற்கு ஊதியம் பெற்றதாலும்-தொழிலாளிகளாக உலகம் முழுதும் பரந்து காணப்பட்டனர்.

இதன் அடிப்படையில்- சோவியத்தின் அக்டோபர் புரட்சியை உலகளாவிய அளவில்

இலங்கையின் முதலாவது அமைச்சரவை

விஸ்தரிப்பதற்கு "சர்வதேச பாட்டாளி வர்க்கம்" பற்றிய லெனினது ஆழமான சிந்தனையின் வெளிப்பாடே "சுயநிர்ணயம்" பற்றிய கருத்தாடலுக்கு வழி சமைத்துக் கொடுத்தது என்றால் அது மிகையல்ல.

எனினும் லெனின் தூர நோக்கோடு 1915-1916 காலப் பகுதியில் சுயநிர்ணய ரீதியாக புரட்சியை உலகெங்கும் வழி நடாத்துவதற்கு சிந்தித்து உருவாக்கிய செயற்திட்ட நகலே 1916 மார்ச்சில் வெளியிடப்பட்ட **Decree On Peace** என்பதாகும்.

இவ் வெளியீட்டில் ஏகாதிபத்திய நலன் நோக்கில் அதன் முகாமைத்துவம் மற்றும் செலவு சிக்கனப்படுத்தலின் நோக்கில் - வலிந்து அல்லது பலாத்காரமாக ஒன்றிணைக்கப்பட்ட தேசமானது-அது ஐரோப்பிய எல்லைக்குள்ளாக இருக்கலாம் அல்லது ஐரோப்பாவை விலத்தி தூர தேச நாடுகளாக இருக்கலாம்-அவற்றுக்கு "சுயநிர்ணயம்" அவசியமானது என்று தனது கருத்தினை முன் வைத்தார். (இவற்றுக்கு சமாந்தரமாக அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சனும் நலன்பேண் நோக்கில் இணைக்கப்பட்டிருக்கலாம். அவ்வாறு இணைக்கப்பட்டிருக்கும் தேசங்களுக்கு சுயநிர்ணயம் தேவையானது என்பது லெனினது சுயநிர்ணயம் பற்றிய கருத்துருவாக்கத்தின் உட்கிடையாகும்.

ஸ்டாலின்

இந்த வகையில் இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் நிகழ்ச்சியான அக்டோபர் புரட்சிக்கு பிற்பாடு 'கம்யூனிச அகிலம்' தோற்று விக்கப்பட்டது. இது குறிப்பாக கீழ்த்திசை நாடுகளின் மக்களது காலனித்துவ விடுதலைக்கு பெரிதும் உதவியது என்பதில் எவ்வித சந்தேகங்களுமில்லை.

இந்தவகையில் காலனித்துவ மற்றும் சமுதாய விடுதலைக்கும் போராடும் - ஆசிய, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு, அதன் தலைவர்களுக்கு போர் தந்திரோபாயங்களையும், கொள்கை வகுப்புக்களையும், ஆதரவுகளையும் - 'கம்யூனிச அகிலம்' வழங்கியது.

இந்தக் காலகட்டத்தில்- இலங்கையை நாம் நோக்குவோமாயின் இலங்கையின் காலனித்துவ விடுதலைக்குப் பெரிதும் துணை நின்றது இந்திய காலனித்துவ விடுதலைக்கான போராட்டம் என்றால் மிகையல்ல. இந்திய காலனித்துவ விடுதலையையும், இலங்கை காலனித்துவ விடுதலையையும், மேற்கத்தைய கல்வி வாய்ப்பை பெற்ற உயர் குழாத்தினரே வேண்டிநின்றபோது இந்திய முதலாளித்துவ நலன் என்றும் பிரித்தானியாவினது ஏகாதிபத்திய நலனுடன் முரண்பட்டுக் கொண்டிருந்தமையால் ஒன்றையொன்று எதிர்த்துப் போராட விளைந்தவேளை இந்தியாவுக்கான காலனித்துவ விடுதலைக்கு இந்திய முதலாளித்துவ வர்க்கத்தினர் முழுமூச்சாக பலமாக நின்றதால் அது தேசிய விடுதலைக்கான என்பதிலும் பார்க்க காலனித்துவ விடுதலைக்கான போராட்டம் என்ற வகையில் வெற்றி பெற்றுக் கொண்டது.

ஆனால்- இலங்கையைப் பொறுத்த வரையில் இந்தியாவைப் போல் தேசிய புவியியல் மற்றும் அரசியல் எல்லைகளுக்குள் வரையறுக்கப்பட்ட 'சுய உற்பத்தி பொருளாதாரமும்' அப் பொருளாதாரத்தை உடமையாகக் கொண்ட ஒரு முதலாளித்துவ வர்க்கமும் இருக்கவில்லை.

ஆனால் - மேற்கத்தைய கல்விப் பாரம்பரியத்திற்கூடாக வந்த 'தரகு முதலாளித்துவ' குடும்பத்தைச் சேர்ந்த இடதுசாரிச் சிந்தனையாளர்களையும் அவர்களது இலங்கைக்கான காலனித்துவ விடுதலை என்ப திலும் பார்க்க, காலனித்துவ சீர்திருத்தக் கோரிக்கைகளையும் கொண்டிருந்தது.

தேசப்பிதா டீ. எஸ். சேனநாயக்கா

இந்த வகையான முரண் நிலைப்பட்

இலங்கையின் தேசப்பிதாவும் குடும்ப நண்பர்களும்

காலனித்துவ விடுதலைக்கான இடதுசாரிச் சிந்தனையும் தரகு முதலாளித்துவ குடும்பப் பின்னணியும் இலங்கையில் இடதுசாரிக் கருத்தியலுக்கோ அல்லது லெனினால் முன்வைக்கப்பட்ட சுயநிர்ணயம் பற்றிய கருத்தாடலுக்கோ இங்கு தெளிவாக வைக்கப்படுவதற்கு வாய்ப்பைத்தரவில்லை.

இதன் துரதிர்ஷ்டமான- பக்க விளைவே இன்றைய காலனித்துவ விடுதலை பெற்ற இலங்கைக்குள் பேரினவாத அரசியல் சிந்தனைகளையும் அதனை எதிர்கொள்வதற்கான தொடர்ச்சியானதும் படிப்படியானதுமான முயற்சிகளின் இறுதி வடிவமாக தமிழ்த் தேசியத்திற்கான ஆயுதப் போராட்டம் இன்று முனைப்புற்றிருக்கின்றது என்றால் அது மிகையல்ல.

(பிரதி செவ்வாய் தொடரும்)



லெனின்

உரிமை பற்றிப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டார். இது மிக அண்மைக் காலங்களிலேயே வெளியுலகத்திற்குத் தெரியவந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தேசியம் பற்றியதும் தேசம் பற்றியதுமான கருத்தாடலின்போதே ஸ்டாலின் "சுயநிர்ணயம்" பற்றிச் சிந்தித்தாரே தவிர - சுயநிர்ணயம் பற்றி முழு உருவகப்படுத்தலையும் ஸ்டாலின் செய்யவில்லை என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

"தேசம் என்பது ஒரேயொரு தனித்த இயல்புடையது" என வரைவிலக்கணமாக மட்டும் கூறிவிட முடியாது. அதைவிட வேறு சில தனித்தன்மைகள் ஒட்டுமொத்தமான கூட்டான இயல்பொன்றைக் கூறி அதனுடன் ஏனைய தேசங்களின் சிறப்பம்சம் எங்ஙனம் வேறுபடுகின்றது என்பது பற்றியும் தேசத்தின் தனித்தன்மையை அதன் ஆள்புலம் மற்றும் பொருளாதாரம் என்ற இரு காரணிகளின் சுயநிர்ணயம் பற்றி தனது கருத்துக்களை முன் வைத்துள்ளார். அவை பின்னர் இந்த ஆய்வின் பிறிதொரு பகுதியில் எடுத்துக் கொள்ளப்படும்.)

லெனினது கருத்தின் பிரகாரம் அரசியற் பிரயோகத்தில் 'அரசு' என்பதும் 'தேசம்' என்பதும் வேறானவை. மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட தேசங்கள் ஆட்சியாளர்களின்

வேலும் மயிலும் சேந்தன்

வலிவடக்கில் நெருப்புக்காய்ச்சல் பரவக்கூடிய அபாயநிலை!

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி எச்சரிக்கை

(வலி. வடக்கு)

வலி. வடக்குப்பகுதியில் நெருப்புக் காய்ச்சல் நோய் பரவக்கூடிய அபாயநிலை இருப்பதால் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி செல்வி நவமலர் கனகரட்னம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மைக்காலமாக வலி. வடக்குப் பகுதியில் நெருப்புக் காய்ச்சல் நோயினால் பலர் பீடிக்கப்பட்டு வருவதாக புள்ளி விபரங்கள் தெரிவிப்பதால் மக்கள் தமது பகுதி சுகாதாரப் பரிசோதகர்களுடன் தொடர்பு கொண்டு தத்தமது கிராமங்களில் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார்.

வலி. வடக்கில் வாந்திபேதி நோய் பரவும் அபாயம் இருந்த போதும் அந்நோய் இப்போது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மழைகாலமும் ஆரம்பித்து விட்டதால் குப்பை கூழங்கள், பற்றைகள் என்பவற்றை அழித்து சுகாதாரம் பேணுமாறும், கிணறுகளுக்கு குளோரின் இடுமாறும் அவர் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (105)

பொன்னாங்காணி மூட்டை தூக்கியவர் திடீர் மரணம்

(மானிப்பாய்)

மானிப்பாய் கட்டுடை, இடிகுண்டு பகுதியில் உள்ள பொன்னாங்காணி தோட்டத்தில் பொன்னாங்காணி மூட்டைகளை தலையில் சுமந்து ட்ராக்டரில் ஏற்றிக் கொண்டிருந்த மாதகலைச்சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான சி.சுந்தரலிங்கம் வயது -38 என்பவர் திடீரென அந்த இடத்திலேயே உடன் பலியானார்.

இவர் கந்தரோடையை தற்காலிகமாக கொண்டு வாழ்ந்து வருகிறார் இவரது சடலம் வைத்திய பரிசோதனையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (100)

தீவகத்தில் மீளக்குடியேறும் மக்கள் அடிப்படை வசதிகளின்றி அவதி

(மண்கும்பான்)

வன்னியிலிருந்து வந்து மண்கும்பான், அல்லைப்பிட்டி, வேலணை போன்ற தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறும் மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி அல்லற்படுகின்றனர்.

இராணுவ நடவடிக்கைகளை அடுத்து ஏற்பட்ட இடப்பெயர்வினை அடுத்து கடற்படையினரால் தமது வீடுகள் உடைக்கப்பட்டு காவலரண்கள் அமைக்கப்பட்டும், திருடர்களால் வீட்டுப் பொருட்கள் களவாடப்பட்டும்விட்டன.

இந்நிலையில் மீளக்குடியேறும் மக்களுக்கு அடிப்படை வசதிகளின்றி சிரமப்படுவதை காண முடிகின்றது. (53)

தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்!

(புன்னாலைக்கட்டுவன்)

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு 2003 ஆம் கல்வியாண்டுக்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம் - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழிநுட்பவியல், நடனம், மனைப்பொருளியல், சங்கீதம், நூலக விஞ்ஞானம், சித்திரம், விஞ்ஞானம், நாடகமும் அரங்கியலும், கணிதம், விவசாயம், சைவசமயம், சமூகக் கல்வி, தமிழ் ஆகிய பாடநெறிகளுக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

நேர்முகப்பரீட்சையில் தோற்றுவோரில் - தகுதி, கூடிய புள்ளி, மாவட்ட அடிப்படையில் தெரிவுகள் நடைபெறும்.

தொழில்நுட்பவியல்

அருள்தாஸ் ஈவன் வெனிதா (முல்லைத்தீவு), அம்பலவாணர் முரளீதரன் (மல்லாவி), இராசரத்தினம் சரவணபவன் (கிளிநொச்சி), குலசேகரம் ஜெயகரன் (கிளிநொச்சி), பிச்சைத் தம்பி முகமட் ரவி (திருகோணமலை), கனகரத்தினம் ரஞ்சித் டெமில் (கல்முனை-2), கோணேசப்பிள்ளை ஜீவதாசன் (செங்கலடி), தேவதர்சினி தேவராசா (துறைநீலாவணை), கனகசூரியன் ஜெயசூரியன் (மட்டக்களப்பு), மாணிக்கவாசகம் புருசோத்மன் (களுவாஞ்சிக்குடி), பிள்ளையந்தம்பி அமுதினி (அம்பாறை), மயிலுப்பொடி ஜெகதரன் (மட்டக்களப்பு), கோபாலபிள்ளை சொருபணன் (மட்டக்களப்பு), கோணலிங்கம் சேகர் (ஆரையம்பதி-2), கருணாகரன் தயாகரன் (கல்முனை), சாமித்தம்பி கருணாநிதி (மட்டக்களப்பு), தனபாலசிங்கம் இதயகுமார் (பெரியபோரதீவு), கிருஸ்ண பிள்ளை வளர்மதி (செங்கலடி), சாமித்தம்பி நடனசபேசன் (மட்டக்களப்பு), சிவபாதசுந்தரம் சிவராஜ் (ஆரையம்பதி-2), கனகரத்தினம் வேர்யினியா பிரியந்தி (மட்டக்களப்பு), ஜெகபாலசிங்கம் பாலமுரளிதரன் (கல்முனை), கோணேசன் கிரிதரன் (கல்முனை), வேலுப்பிள்ளை விஜயபவா (மட்டக்களப்பு), அப்துல்காதர் முகமட் இஸாக் (அக்கரைப்பற்று-5), வேலாயுதம் குமரன் (தன்னமுனை), தில்லைநாயகம் நாகநாதன் (புதுக்குடியிருப்பு-4), சிவஞானம் சுகிர்தமலர் (செட்டிப்பாலயம்), செல்லத்தம்பி சத்தியதாஸ் (மட்டக்களப்பு), கனகசுந்தரம் உதயமலர் (கல்முனை), கனகராஜா மோகனகாந்தி (பெரியகல்லாறு-1), கபீப் முகமட் சகிலா வாஸ்வீன் (சாய்ந்தமருது), யோகராஜா தவஜீவன் (கல்முனை-1), ஆறுமுகன் சாமினி (மட்டக்களப்பு), சபாரத்தினம் சுதாகரன் (மட்டக்களப்பு), சிவலிங்கம் சிவசசிதா (தம்பிலுவில்-2), பொன்னுத்துரை கனகேஸ்வரி (துறைநீலாவணை), ஸ்ரான்லி மாதர்ஸ் அன்ரனி புரூனோ (கல்லாறு), நடராசா சிவராசா (மண்டூர்), அப்துல்காதர் அப்துல் கபீர் (அக்கரைப்பற்று), சிவமார்க்கண்டு சுயாகரன் (மட்டக்களப்பு), கோபால பிள்ளை சிறிதரன் (பெரியபோரதீவு), மரியதாஸ் அக்றோகினி கஸ்தூரி (பாண்டிருப்பு-2), தட்சணாமூர்த்தி கோமகள் (சேது குடா), கனகரத்தினம் லோகிதா (ஆரையம்பதி), நடராசா ஜெயரஞ்சினி (மட்டக்களப்பு), முகமட் காசீம் சினோவா (சம்மாந்துறை), பரராசா ஜெயமதி (கல்முனை), அன்ரனி ஜில்பேற் அருள்தாஸ் (தன்னமுனை), சிவமலர் முருகேசு (மட்டக்களப்பு), தியாகராஜா ராதிகா (செட்டிப்பாலயம்), யோன்பிள்ளை மேர்வின் (மட்டக்களப்பு), ராஜகோபால் வசந்தா (வந்தாறுமூலை), கருணாநந்தமூர்த்தி கருணாகரன் (களுவாஞ்சிக்குடி), காந்தபெருமாள் இதயவேனி (செட்டிப்பாலயம்), பொன்னையா ருக்குமணி (வவுனியா), சுந்தரராசா சுகிர்தா (செட்டிகுளம்), சிவசாமி விநாயகமூர்த்தி (கட்டைக்காடு), செல்வகுமார் மகேசன் ஜீவராணி (வவுனியா), கருணாநிதி தர்சினி (சுன்னாகம்), ராஜரட்ணம் மோகனதாஸ் (இணுவில்), பாலசுப்பிரமணியம் காந்தரூபன் (அல்வாய்), நித்தியானந்தன் நவநீதகுமாரன் (இணுவில்), உதயசிங்கம் நித்தியலுகரி (அரியாலை), ராஜரட்ணம் சுஜீவன் (மல்லாகம்), நிர்மலன் மோகனா (மல்லாகம்), கலாரஞ்சினி கந்தசாமி (வல்வெட்டித்துறை), தர்மதாசன் தனுயா (சண்டிலிப்பாய்), கார்த்திகேசு காஞ்சனா (அளவெட்டி), யோகநாதன் யான்சி சுதாமதி (சுன்னாகம்), யேசுதாஸன் கனிஸ்டயூட்டி (பாண்டிருப்பு), ஜீவகலா ராஜதுரை (மானிப்பாய்), சின்னத்தம்பி தமயந்தி (சுன்னாகம்), வல்லிபுரம் கணேசலிங்கம் (அச்சுவேலி), இளையதம்பி கருணா (வல்வெட்டித்துறை), கனகலிங்கம் மதிரூபன் (கொக்குவில்), செல்வம் தர்மகுமாரன் (கோப்பாய்), பரமேஸ்வரன் வரதராஜன் (உரும்பிராய்), ரட்ணம் தயாபரன் (கோண்டாவில்), பாலசிங்கம் ஜெகபவன் (கொடிகாமம்), மார்க்கண்டு சசிரூபன் (அளவெட்டி), கார்த்திகேசு கயேந்திரன் (கச்சாய்), கந்தையா சுவாமிநாதன் (புத்தூர்), பொன்னன் கஜேந்திரன் (உரும்பிராய்), கோபாலகிருஸ்ணன் மதனகோபன் (யாழ்ப்பாணம்), ரட்ணராசா ஜெயகரன் (கொக்குவில்), ரட்ணம் ஜெகநாதன் (வல்வெட்டித்துறை), வீரசிங்கம் யோககலா (கரவெட்டி), எட்வேட் அன்ரன் ரொபினா தயாளினி (புதுக்குடியிருப்பு), ராஜரட்ணம் மதியரசி (வவுனியா), பசுபதி சயகமலன் (வவுனியா), ஜெயராஜசேகரம் நளினி (வவுனியா), மொகமட் மகறூப் பாத்திமா பரிட்டா (வவுனியா), அப்தூல் மயித் அகமட் நக்பல் (சாமந்துறை), ராஜேந்திரன் முரளிதாசன் (அக்கரைப்பற்று), லோகிதராஜா சத்தியா (மட்டக்களப்பு), பகீர் முகமட் அக்ரம் (மூதூர்-5), அபோகன்பா நார்சூக் (திருகோணமலை), கல்லடி பிச்சை முகமட் அஸ்லாம் (வவுனியா), இராஜரத்தினம் மதியரசி (மன்னார்), அப்துல் மஜிட் அகமட் நகுபல் (சாமந்துறை), செல்லமுத்து பாஸ்கரன் (மட்டக்களப்பு), நடராசா அரவிந்தன் (பாண்டியங்குளம்).

நடனம்

நவரட்ணம் ரவிதாஸ் (புளியம்பொக்கணை), நல்லபிள்ளை நர்மலா (முள்ளியவளை), ஆனந்தன் வைதேகி (உடையார்கட்டு), பூபாலசிங்கம் தயானி (கிளிநொச்சி), மாலினி செல்வராஜ் (புதுக்குடியிருப்பு), உதயகுமாரி சிவப்பிரகாசம் (பூநகரி), செல்வபெருமாள் பத்மாவதி (கிளிநொச்சி), ராமசாமி ரஞ்சனா (கிளிநொச்சி), மாணிக்கராஜ் கலாநிதி (மட்டக்களப்பு), ஜோன் றியோயினி (கல்முனை), காஸ்மீர் ஜோன்சன் கிறிஸ்டியன் (மட்டக்களப்பு), லக்ஸ்மன் நிஷாந்தினி (இளவாலை), தர்மலிங்கம் சலாயாயினி (வாகனேரி), சிவராமமூர்த்தி விக்னகுருபரன் (மட்டக்களப்பு), வீரசிங்கம் உஷாநந்தினி (செட்டிபாலயம்), தவராஜ் சிவபிரியா (கொழும்பு-5), அரியலிங்கம் தீபா (மொறட்டுவ), கந்தசாமி உதயபிரியா (வவுனியா), தங்கேஸ்வரன் கவிதா (வவுனியா), சிவராஜன் சிவாஜினி (திருகோணமலை), தேவராசா கம்ஸ்ஹவாகினி (திருகோணமலை), முருகசோதிராஜ் சந்திரவதனா (சுழிபுரம்), சந்திரசேகரம் குணாநிதி (மீசாலை), விஸ்வநாதர் தர்சினி (புத்தூர்), ராஜரட்ணம் தமயந்தி (கோப்பாய்), கிருஸ்ணபிள்ளை கிருசாந்தி (கரவெட்டி), நாகமுத்து புஸ்பலதா (வல்வெட்டித்துறை), சிவசம்பு கௌசலை (மீசாலை), ராஜரட்ணம் தர்சினி (நீர்வேலி), சிவநேசன் தாக்ஸ் சாயினி (ஏழாலை), அருமைநாயகம் அம்பிகை (தெல்லிப்பளை), யோகநாதர் கஸ்தூரி (தெல்லிப்பளை), யேசுநாயகர் டொரீன் விசிதா (மானிப்பாய்).

மனைப்பொருளியல்

ரோகினி வெற்றிவேலாயுதம் (விசுவமடு), சிவசிங்கம் வினோரஜனி (உடையார்கட்டு), சீனித்தம்பி சசிகலா (மட்டக்களப்பு), பெனான்டோ கலிஸ்ரா (மட்டக்களப்பு), அப்துல் காதர் சித்தி பாஜியா (மருதமுனை-2), மேனகா பொன்னம்பலம் (புளியங்குளம்), அந்தோனி முதுபத்மலீனா (வவுனியா), யூட் றேணுகா திருச்செல்வம் (வேப்பங்குளம்), பிரான்சிஸ் மேரி மெற்றலீன் (முருங்கன்), பெனடிக்ற் சியாமளா (மன்னார்), செல்லக்கண்டு அருக்ன கொன்சி (சாவகச்சேரி), கனகலிங்கம் ஜெகந்தினி (சுன்னாகம்), சிவசுப்பிரமணியம் கல்பனா (மானிப்பாய்), குருநாதன் தேவகி (சாவகச்சேரி), சுந்தரலிங்கம் ரூபாஜினி (கோப்பாய்), சின்னப்பு ஜெகந்தா (அளவெட்டி), செல்வரட்ணம் சுகந்தினி (திருநெல்வேலி), கதிர்காமத்தம்பி அகிலா (கரவெட்டி), கந்தசாமி கலைவாணி (பருத்தித்துறை), சிவகுருநாதன் சிவவதனி (சாவகச்சேரி), உஷாநந்தி பேரானந்தன் (நல்லூர்), பவானி இரட்ணசிங்கம் (மானிப்பாய்).

சங்கீதம்

ஜெயபாலசிங்கம் ஜெசித்திரா (முள்ளியவளை), அமரசிங்கம் சுயாத்தா (பரந்தன்), தவராசா கமலதாஸன் (முல்லைத்தீவு), ரஜநாயகம் கேமா (முல்லைத்தீவு), சீவரத்தினம் சோபினி (பரந்தன்), சிதம்பரப்பிள்ளை வதனி (முல்லைத்தீவு), தம்பிராசா ஜெயசந்திரிக்கா (விசுவமடு), சண்முகலிங்கம் பிரசாந்தன் (தம்பலகாமம்), விசுவலிங்கம் தர்சினி (குருக்கள்மடம்), வீரக்கோன் லக்ஷ்மிலலானி (வாழைச்சேனை), அரசரத்தினம் வஜித்தா (திருகோணமலை), கனகராஜா மோகனகலை (பெரியகல்லாறு), குணசேகரம் வித்தியகாந்தா (ஏறாவூர்), சுப்பிரமணியம் விஜியதாரணி (மட்டக்களப்பு) நேசதுரை மேகலா (களுவாஞ்சிக்குடி) தேவநாயகம் கார்த்திகா (மட்டக்களப்பு) சோமசுந்தரம் புவிராஜா (கல்முனை-1), ராஜரட்ணம் தர்சினி (களுவாஞ்சிக்குடி), புஸ்பராஜா திரேஸ் (கிரான்), சுப்பிரமணியம் ஜெயக்குமாரி (கிரான்), கெங்கேஸ்வரன் தாட்சாயினி (கிரான்), ரதிமலர் தர்மலிங்கம் (கொழும்பு-13), அட்டனிப்பிள்ளை யூடியத் யூக்கரிஸ்டா (முருங்கன்), நடேசபிள்ளை பகிரதி (வவுனியா), யோகநாதர் சுபத்திரா (புத்தளம்), கிருஸ்டியன் டெலினி மேக்கிரீட் பீரிஸ் (மன்னார்), தேவாஞ்சலி தர்மலிங்கம் (வவுனியா) தேவதுரை வசந்தகுமாரி (கோண்டாவில்), வீரகுமார் வகுட்சா (சம்பியான்பதி), துஷ்யந்தி விஸ்வநாதக்குருக்கள் (கரவெட்டி), சிவலோகநாகன் சிவமதி (மிருசுவில்), வைரவநாதர் தீபா (கைதடி), நாகேஸ்வரி சிவலிங்கம் (மிருசுவில்), சின்னராஜா காமினி (இருபாலை), திருநாவுக்கரசு தர்சினி (திருநெல்வேலி), சுப்பிரமணியம் தயாநந்தினி (அச்சுவேலி), அகிலா கந்தசாமி (கரவெட்டி), கார்த்திகேசு உதயகலா (மிருசுவில), ஜெயபாமினி கிருஸ்ணசாமி (உடுப்பிட்டி), நிக்ளஸ் மரினா (பண்டத்தரிப்பு), ஜயாத்துரை அனோஜா (அல்வாய்), நாமா சிவக்கொழுந்து (கரவெட்டி), பாலசிங்கம் சுமாலியா (புத்தூர்), தர்மலிங்கம் தயானி (கரவெட்டி), பாலசுப்பிரமணியம் சங்கீதா (யாழ்ப்பாணம்), ராஜதுரை ரனிதா (சண்டிலிப்பாய்), தெய்வேந்திரம் ரூபினிசாந்தி (நல்லூர்), தங்கவேல் றஜிதா (பருத்தித்துறை), அருளப்பன் யேசுமேரி (யாழ்ப்பாணம்), சின்னத்துரை ஜெயமதி (யாழ்ப்பாணம்), கோகுலவாணி காசிநாதர் (மிருசுவில்), தர்மகுலசிங்கம் ரஜித்தா (வரணி), தனபாலசிங்கம் சுரேந்தினி (மீசாலை), ராசநாயகம் கௌசலா (கொற்றாவத்தை), ரஞ்சித் ரஞ்சித்தா (சண்டிலிப்பாய்), வின்சென்ட் அன்ரெனி சியாமளா (இளவாலை), சிவராசா அருள்நந்தி (கரவெட்டி), புவனேந்திரன் சுதா (பருத்தித்துறை), யோகராசா விகிர்தா (புத்தூர்), வசந்தி கணேசதுரை (திருநெல்வேலி), குணராசா சிசாந்தி, ஆறுமுகம் சுரேசினி (கன்வெரலா), ரட்ணம் தனகாம்பிகை (அராலி), சுலமன் குரூஸ் வெலன்ரைம் சுபத்திரா (மன்னார்).

நூலக விஞ்ஞானம்

கவிதா சிறீநந்தன் (வட்டக்கச்சி), கணேசன் துஸாயினி (கிளிநொச்சி), கெங்காதரன் விஜிதா (வடடுக்கோட்டை), சபாரத்தினம் எழில் (கிளிநொச்சி), பாலசுந்தரம் கிருசாந்தினி (மட்டக்களப்பு), வின்சஸ்லஸ் மதுரநாயகம் மெற்ரா (ஆனைக்கோட்டை), பீதாம்பரம் ஜெகப்பிரியா (வல்வட்டித்துறை),செல்லப்பா சுபத்திரா (மானிப்பாய்),சங்கீதா நடராஜா (விசுவமடு), பாஸ்கரன் அனிதா (வவுனியா), நடராஜா யசோதா (யாழ்ப்பாணம்), கிருபனா கிருஸ்ணபிள்ளை (உடுப்பிட்டி) தேவாஞ்சலி தர்மலிங்கம் (வவுனியா), கணநாதன் சாந்தினி (அரியாலை), பவளரஞ்சினி சண்முகலிங்கம் (வவுனியா), பாலசிங்கம் நிதர்சினி (சுன்னாகம்), தங்கராஜா சிவகலா (தெல்லிப்பளை), சந்திரசேகரம் விஜிதா (சாவகச்சேரி), தங்கராஜா சிவப்பிரியா (இடைக்காடு), கணேசரட்ணம் ஜெயமலர் (கரவெட்டி), செல்வராஜா பவானி (கரவெட்டி), டில்ருக்ஸி விஜயவர்த்தனா (பற்றியக்கெடற), இராஜகோபால் ஜெயதிரி (புத்தளம்), பி.ஜி.ஆர்.எச்.இனோகாகுமாரி (குருணாகல்), குடகமகே அநோசா நிலந்திமாலா (அகான்கம), பிகாம்பிய லியானகோ கஜானி (இலுக்கட்டிய), அசுரப்புலிகே சதுராங்கனி இகனநாயக்க (கொறும்பாவ), முடியன்செலேக் சோமாவதி (பற்றியக்கெடற), யோகேஸ்வரி அமரதுங்க (வாஞ்சவல), டுனறற்ன மெனிக் (டொம்பகவெல), சிவானந்தராஜன் ராதிகா (பெரியகல்லாறு-1), தியாகராஜன் தீபா (தெல்லிப்பளை), கதரின் சோபனா தேவதாஸ் (திருநெல்வேலி), பூரணசாஜகம் ஜோதினி (யாழ்ப்பாணம்), அம்பிகைபாலன் கலைமகள் (ஆனைக்கோட்டை) கார்த்திகேசு கல்யானி (புலோலி), சண்முகலிங்கம் சிவரஞ்சினி (பண்டத்தரிப்பு), தயாவதி தெய்வேந்திரம்பிள்ளை (எழுதுமட்டுவாள்), இலக்சுமணன் அபிராமி (பருத்தித்துறை), விஜிதா இராஜேந்திரம் (சாவகச்சேரி), குமாரசாமி பகீரதி (மானிப்பாய்), செல்வநாதன் கவிதா (யாழ்ப்பாணம்), மாணிக்கவாசகர் சிறீதர்சினி (தெல்லிப்பளை), வாமசிவன் தக்சாயினி (யாழ்ப்பாணம்), வசந்தி கணேசதுரை (திருநெல்வேலி), பத்மநாதன் பிரகாசினி (யாழ்ப்பாணம்), மகேந்திரன் சுபேந்திரன் (யாழ்ப்பாணம்), பிரதீப் உஷான் பீற்றர் (கொழும்பு-15), ரட்ணசிங்கம் ரணேசன் (யாழ்ப்பாணம்), கணபதிப்பிள்ளை திரவியகுமார் (தாளையடி), தயாபரன் சுதன் (யாழ்ப்பாணம்), சின்னக்கண்ணு செந்தில்நாதன் (நாரந்தனை), கண்ணதாசன் (கந்தர்மடம்), சின்னராஜா சிவரூபன் (இணுவில்), சண்முகநாதன் சபாநந்தன் (சிலாபம்) தவராஜா சுஜேந்திரன் (வேலணை), பவளகாந்தன் ஜெயபரன் (கரணவாய்மத்தி), சின்னையா குமாரவேலு குலசிங்கநாதன் (மாகோ), அருளானந்தம் பிரசாந் (மட்டக்களப்பு), கந்தையா சந்திரகாந்தன் (மயிலிட்டி), யோசப் பல்தசார் எம்கெயித் (மட்டக்களப்பு), ஆனந்தகுமார் மோகனகாந் (திருகோணமலை), யுஉதயச்சந்திரன் (திருகோணமலை)

சித்திரம்

முத்துலிங்கம் செல்வேந்திரன் (முல்லைத்தீவு), யோதீஸ்வரன் சிவாநந்தகுமார் (கிளிநொச்சி), தம்பி ஐயா கதிர்காமநாதன் (கண்டாவளை), ஏரம்பமூர்த்தி பிரபாகரன் (முல்லைத்தீவு), பாலச்சந்திரன் ரமாகரன் (கிளிநொச்சி), சிலாப்டீன் றிஜாத் (கிண்ணியா), சுலைமான் லெப்பே முகமட் குத்தூஸ் (இறக்ககாமம்), சின்னத்தம்பி வேணுகரன் (கல்முனை), பத்மநந்தன் கமலப்பிரதீபா (மட்டக்களப்பு), நீலயதக்ஷி சிவானந்தராஜா (கல்முனை), கிருஸ்ணபிள்ளை சுகந்தன் (மட்டக்களப்பு), புஸ்பநாதன் இராகுலன் (களுவாஞ்சிக்குடி), பாலச்சந்திரன் ரமணகரன் (பண்டத்தரிப்பு), சுந்தரலிங்கம் சத்தியேஸ்வரன் (மட்டக்களப்பு), சாகுல் கமீட் ஆஸ்தன் அஸ்வகார் (மட்டக்களப்பு), சண்முகநந்தன் கணேசதாஸ் (மட்டக்களப்பு), சிவதாசன் சந்திரசுபாமினி (கல்பிட்டிய), சின்னத்தம்பி யோகிதா (கொக்கட்டிச்சோலை), தம்பிமுத்து கரதுசானன் (கொக்கட்டிச்சோலை), கோபாலபிள்ளை விஜயகுமார் (களுவாஞ்சிக்குடி), மொகமட் இஸ்மாயில் றம்ஸாபேகம் (காத்தான்குடி), மொகமட் யூனுஸ்மரியா (ஆளங்குடா), நடேசன் தயாளன் (அக்கரைப்பற்று), தர்மபாலன் தெய்வேந்திரம் (மண்டூர்), யோகராஜா தவஜீவன் (கல்முனை-1), அப்துல் ஜலீல முகமட் ரனீஸ் (கிண்ணியா-5), பயுடீன முகமட் ருசி (திருகோணமலை) முகமட் சக்கரியா முகமட் நவீம் (கிண்ணியா), தங்கலிங்கம் கண்ணன் (மடக்களப்பு), மாமாங்கம் திருதானி (மடக்களப்பு) தியாகராஜா லோகேசினி (வாகரை), தைடீன் வகிமா (காகம), தேவராஜ் சுகந்தி (டிக்கோயா), வாமதேவன் சுஜீவ் (கல்பிட்டிய), மாதர் முகைதீன் கலிமா (புத்தளம்), ஆறுமுகம் சுரேயினி (கன்ரூஎல), முகமட் உவாசிதி நூர்ஜகான் (மாவனல்ல), தகிர்டீன் சாம்சுல் இனாயா (ஞானவெலிபொல),

(மிகுதி நாளை தொடரும்)

இன்றைய நாள் இனிய நாள்

08.10.2002 - செவ்வாய்க்கிழமை

மேடம்	:-	தொழில்ஸ்தானத்தில் நற்பெயர், சுப காரியங்களில் கணவன், மனைவி மகிழ்ச்சி, பண வரவு, மரியாதை, கல்வி முன்னேற்றம்.
இடபம்	:-	பொது சேவையில் ஈடுபாடு, காரிய தாமதம், பொருளாதாரப் பிரச்சினை, மனஸ்தாபம், உடலழகில் குறை, கல்வி முன்னேற்றம்.
மிதுனம்	:-	பொது சேவையில் நற்பெயர், புத்திர சுகம், தாயாரின் தேக சுகக் குறைவு, கல்வி முன்னேற்றம்.
கர்க்கடகம்	:-	வைத்தியச்செலவு, வாகனச்செலவு, மனப்பயம், நம்பிக்கை குறைவு, பொருள் வரவு, தகாத நண்பர்கள் உறவு, கல்வியில் ஊக்கம் வேண்டும்.
சிங்கம்	:-	சென்ற இடத்தில் மகிழ்ச்சி, ஆலய வழிபாடு, தொழில்ஸ்தானத்தில் சிறப்பு, கணவன் மனைவி மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம்.
கன்னி	:-	தேக சுகம் நன்றல்ல, காயம் ஏற்படுதல், வரவுக்கு மிஞ்சிய செலவு, கணவன் மனைவி மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

துலாம்	:-	பண வரவு, ஆடையாபரண பலன், குடும்ப மகிழ்ச்சி, விருந்து, கண்வலி, பெண்களின் தொல்லை, கல்வியில் ஊக்கம் வேண்டும்.
விருச்சிகம்	:-	எடுத்த காரியம் தடை, விளைபொருள் விருத்தி, பணவரவு, தேவையற்ற செலவு, கல்வி முன்னேற்றம்.
தனு	:-	பணவரவு, மனமகிழ்ச்சி, தெய்வ வழிபாடு, தொழில் முன்னேற்றம், கலை நிகழ்ச்சியில் ரசனை, கல்வி முன்னேற்றம்.
மகரம்	:-	தொழில் முன்னேற்றம், மதிப்பு, பிதாவுக்கு தேக சுகக் குறைவு, உறவினர் வழியில் செலவு, தீராப்பழி, அலைச்சல், கல்வியில் ஊக்கம் வேண்டும்.
கும்பம்	:-	பிதா மகிழ்ச்சி, திடீர் பயம், காயம் ஏற்படுதல், வயிற்றில் ரோகம், கல்வியில் ஊக்கம் வேண்டும்.
மீனம்	:-	பணவரவு, அறுசுவையுண்டி, வீட்டில் மகிழ்ச்சி, கௌரவம், கலைநிகழ்ச்சி ரசனை, கல்வியில் ஊக்கம் வேண்டும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

பாலசிங்கம் வந்த பின்னரே ஆறு படையினர் பற்றி பேச்சு!

- புலிகள் அறிவித்ததாக திலக் மாரப்பன -

(கொழும்பு நிருபர்)

விடுதலைப் புலிகளின் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு சற்று உடல் நலக் குறைவு ஏற்பட்டிருப்பதால் - அவர் இந்த வாரம் எதிர் பார்த்தபடி வருகை தரமாட்டார் எனத் தெரிய வருகிறது.

இதேவேளை - மல்வத்தை பீட மகாநாயக்க தேரைச் சந்தித்த, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன - விடுதலைப்புலிகளால் கைதுசெய்யப்பட்டுள்ள ஆறு படையினரை விடுதலை செய்வது பற்றி அன்ரன் பாலசிங்கம் வந்த பின்னரே பேசமுடியும் என புலிகள் தரப்பிலிருந்து பதில கிடைத்திருப்பதாகக் கூறியிருக்கின்றார்.

இலங்கையில் அமெரிக்கத் தலையீடு ஈராக்கின் நிலையை ஏற்படுத்தும்!

- அமெரிக்கத் தூதரகம் முன் ஜே.வி.பி.ஆர்ப்பாட்டம் -

(கொழும்பு நிருபர்)

ஈராக்குக்கு எதிரான இராணுவ அச்சுறுத்தலை விடுத்துவரும் அமெரிக்காவைக் கண்டித்து ஜே.வி.பி நேற்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் மேற்கொண்டது.

அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக நூற்றுக்கும் மேற்பட்ட ஜே.வி.பி.யினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முற்பட்ட போது பொலிசார் தடுக்க முனைந்தனர்.

எனினும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஜே.வி.பி.யினர் சார்பில் மூவர் மட்டும் தூதரகத்துக்குள் சென்று கண்டன மகஜர் கையளிக்க அனுமதிக்கப்பட்டனர்.

எண்ணை வள நாடுகள் மீது தாக்குதல் நடத்தும் அமெரிக்காவின் திட்டத்தை நிறுத்த வேண்டும் எனக் கூறியுள்ள ஜே.வி.பி. இலங்கையிலும் அமெரிக்கத்தலையீடுகள் அதிகரித்துள்ளமையால் இதே நிலை இலங்கைக்கும் வரும் என எச்சரித்துள்ளது.

கடத்தப்பட்ட வான் புலிகளால் மீட்பு

(கொழும்பு)

கொழும்பில் வைத்துத் திருடர் குழுவால் கடத்தப்பட்ட வாகனம் ஒன்று விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாதம் 24 ஆம் திகதி க.தேவானந்தன் என்பவருக்குச் சொந்தமான 253-0465 என்ற இலக்கமுடைய டொல்பின் ரக வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்திய பிரஸ்தாப திருட்டுக் குழுவினர் வத்தளை - மகாபொலச் சந்தியில் வைத்து சாரதிக்கு மயக்க மருந்து கொடுத்து மயக்கிவிட்டு வாகனத்தைக் கடத்திச் சென்று விட்டனர்.

இது தொடர்பாக விடுதலைப்புலிகளிடமும் பொலீஸாரிடமும் முறையிடப்பட்டிருந்தது. கடந்த மாதம் 5 ஆம் திகதி கந்தானையில் வைத்து புலிகள் குறிப்பிட்ட வாகனத்தை மீட்டு உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளனர்.

புலிகள் ஆறு சிறுவர்களை பெற்றோரிடம் ஒப்படைத்தனர்

(மட்டக்களப்பு நிருபர்)

விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்த ஆறு சிறுவர்கள் நேற்று கொக்கட்டிச் சோலையில் வைத்து அவர்களின பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கொக்கட்டிச்சோலை அரசியல் துறை அலுவலகத்தில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் மாவட்டச் செயலகத்தின் நிர்வாகப் பொறுப்பாளர் நிமல்ராஜ் சிறுவர்களைப் பெற்றோரிடம் கையளித்தார்.

மரண அறிவித்தல்

டாக்டர் சிவசுப்பிரமணியம் மூத்ததம்பி

(MC LEOD HOSPITAL, INUVIL, ST.LUKES METHODIST HOSPITAL, PUTTUR)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் மூத்ததம்பி அவர்கள் 05.10.2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வல்வெட்டி கந்தப்பா வளவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - சிவக்கொழுந்து தம்பதியரின் மூத்த புதல்வரும் மல்லாகத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியை மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சோதிரட்னம் (மலேசியா), பொன்னம்மா (கனடா), இராஜேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான நடராஜா, சிவநாதன், சிவமலர் ஆகியோரின் அருமைச் சகோதரரும் நிர்மலானந்தன், சுமதி, சதானந்தன் (நோர்வே), கேமவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.10.2002) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மல்லாகம், சப்பிட்டியன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கேமா வாசா".
8ஆம் கட்டை ஒழுங்கை,
தெல்லிப்பழை. (சி-039)

தகவல்:
பெறாமகன் க.கெங்காதரன்.

உண்ணாவிரதிகளுக்கு ஆதரவாக

கண்காணிப்புக்குழு அலுவலகம் முன் ஐக்கிய சோசலிசக் கட்சி மறியல்

(யாழ்ப்பாணம்)

களுத்துறைச் சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து ஐக்கிய சோசலிசக்கட்சி அடையாள எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.

நேற்று மாலை இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்திற்கு முன்னால் ஒன்று கூடிய இக்கட்சியின் தொண்டர்கள் மேற்படி போராட்டத்தில் ஈடுபட்டனர். இப் போராட்டத்தின் இறுதியில் மகஜர் ஒன்றையும் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் கையளித்தனர். இம்மகஜரின் விபரம் வருமாறு:-

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் , விசாரணை இன்றிச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். இவ்விடயத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தலையிட்டு உரிய நடவடிக்கையை உடனே மேற்கொள்ள வேண்டும். அரசு-விடுதலைப் புலிகளிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுவதற்குப் பாலமாகத் திகழும் தாங்கள் இவ் விடயத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்த முடியும் என்று நாம் நம்புகிறோம். தவறும்பட்சத்தில் நாடளாவிய பாரிய போராட்டமொன்றை முன்னெடுக்க ஐக்கிய சோசலிசக்கட்சி தயாராயுள்ளது என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

யூனியன் கல்லூரி உதைபந்தாட்டப் போட்டி; இறுதிநேரத்தில் மீண்டும் நிறுத்திய படையினர்!

(வலி.வடக்கு)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நேற்று நண்பகல் நடைபெறவிருந்த உதைபந்தாட்டப் போட்டி படையினரின் திடீர் அறிவிப்பால் கைவிடப்பட்டது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரியர் தின விழா, உதைபந்தாட்டப் போட்டிகள் என்பவற்றை நடத்துவதற்கு ஏற்கனவே படையினரால் அனுமதி மறுக்கப்பட்டிருந்த போதிலும் நேற்றுமுன்தினம் போட்டியை நடத்தப் படையினர் அனுமதித்திருந்தனர்.

ஆனால் குறுகியகால இடைவெளியில் ஆசிரியர் தினத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் உள்ள இடையூறுகள் காரணமாக ஆசிரிய தினம் நேற்றுக் கொண்டாடப்படவில்லை.

எனினும் ஆசிரியர் தினத்திற்கென மாலைகளோடு வந்த மாணவர்கள் அவற்றை வாணி விழாவுக்குப் பயன்படுத்தினர்.

ஆசிரியர் தின விழா கொண்டாடப் படாவிட்டாலும் நேற்று நண்பகல் 2 மணிக்கு இளவாலை ஹென்றியரசர் கல்லூரியுடன் உதைபந்தாட்டப் போட்டி ஒன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் நேற்றுப் பகல் 1 மணியளவில் காங்கேசன்துறை படைத் தலைமையகத்திலிருந்து வந்த திடீர் அறிவித்தலால் உதைபந்தாட்டப் போட்டியை நடத்த முடியாதநிலை ஏற்பட்டது. எனினும் - பாடசாலை நிர்வாகம் இப்போட்டியைக் கைவிடாது அதனை இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்திற்கு இடம் மாற்றியது.

(105)

அமைச்சர்....

வரன் சட்டமா அதிபருடன் தொடர்பு கொண்டு கைதிகளை அவர்களது சொந்த மாவட்டங்களின் சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுள்ளார். அமைச்சரின் கோரிக்கை கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தெரிகிறது.

கோயிலாக்கண்டி...

யமருமாறு படையினர் வற்புறுத்தினர். மக்கள் அதற்கு உடன்பட மறுத்து பொருத்தமான சூழ்நிலை ஏற்படும்போதே நாம் மீளக் குடியமர்வோம் என படை அதிகாரிகளுக்குத் தெரிவித்தனர்.

எமது...

ரில்லை மனிதாபிமான அடிப்படையில் எம்மை விடுதலை செய்யுங்கள் எதிர் வரும் தீபாவளி திருநாளை எம் உறவுகளுடன் கொண்டாட உதவுங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது

வெகுஜனப் போராட்டம்....

களுடைய உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் யாழ் குடாநாட்டில் 51 அரசசார்பற்ற அமைப்புகளின் வெகுஜன ஒன்றியம் நாளை நண்பகல் 12 மணி தொடக்கம் 2 மணிவரை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். தலைமை அலுவலகத்தில் பெரும் அமைதிப் போராட்டம் ஒன்றினை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதுடன் ஓர் அறிக்கையையும் வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் -

ஸ்ரீலங்கா அரசின் பல சிறைகளிலும் விசாரணைகள் ஏதுமின்றியும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாமலும் மிக நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விரக்தியின் விளிம்பில் நிற்கின்றனர். இவர்கள் தாம் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து களுத்துறைச் சிறைச்சாலைகளிலும் வேறு சிறைச் சாலைகளிலும் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களை தொடர்ந்து தடுத்து வைத்திருத்தல் மிகப்பெரிய மனித உரிமை மீறலும் இன ஒடுக்கு முறையின் இன்னுமோர் வடிவமும் ஆகும். சட்டநிலைகள் எவ்வாறாயினும் அவற்றை புறந்தள்ளி இக்கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக விடுதலை செய்யும்படி கோரும் வகையிலேயே இப்போராட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நாளையதினம் சகல பாடசாலைகளிலும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிலும் காலைநேரப் பிரார்த்தனையின் பின் அதிபர் அல்லது ஆசிரியர் ஒருவர் மனித உரிமை மீறல்கள் பற்றியும் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றியும் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக உரையாற்றுவார்.

அன்றையதினம் 12மணி தொடக்கம் 1 மணிவரை சகல திணைக்களங்களிலும், பாடசாலைகளிலும், கூட்டுறவு, வங்கித்துறை ஊழியர்கள் தமது அலுவலகங்கள், திணைக்களங்கள் முன்பாக வெளியே வந்து அமைதிப் போராட்டம் நடத்துவர்.

அன்றையதினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் முன் அரசசார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்களும் ஏனையவர்களும் 12 மணிமுதல் ஒன்று கூடி அமைதிப் போராட்டம் நடத்துவதுடன் மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ் பிரதிநிதியிடம் மகஜர் ஒன்றையும் கையளிப்பர்.

அப்போது பிரதமர், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர், அமைச்சர் மிலிந்த மொறகொட, யு.என்.எச்.சி.ஆரின் பிரதிநிதி ஆகியவர்களுக்கு மகஜர் அனுப்பி வைக்கப்படவுள்ளது. (56)

நாணய மாற்று விகிதம்

இலங்கை மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தினால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலாவணிகளுக்கான நாணய மாற்று விகிதங்கள் தொடர்பான விபரம் வருமாறு

	கொள்வனவு விலை (ரூ.ச)	விற்பனை விலை (ரூ.ச)
1அமெரிக்க டொலர்	96.00	96.45
1ஸ்ரேலிங் பவுண்	149.85	151.18
1யூரோ	93.64	94.74
1சுவிஸ் பிராங்	63.95	64.94
1அவுஸ்ரேலிய டொலர்	51.21	53.17
1ஜப்பானிய யென்	00.77	00.78
1சவூதி றியால்	25.67	25.67

மரண அறிவித்தல்களுக்கு 40% விசேட கழிவு

'நமது ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரமாகும் மரண அறிவித்தல்களுக்கு - விளம்பரக் கட்டணங்களில் 40 சதவீத விசேட கழிவு வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.